REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 செப்டெம்பர் 1 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN

வரு. 88 இல. 207 | September 01,Tuesday, 2020 | 12பக்கங்கள் | 30/-

## இந்திய முன்னாள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி காலமானார்



இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி நேற்று காலமானார். அவர் டெல்லியில் உள்ள இராணுவ ஆராய்ச்சி வைத்தியசாலையில் கடந்த 10ந் திகதி சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். மூளையில் கட்டியை அகற்ற சத்திரசிகிச்சை செய்ததைத் தொடர்ந்து, அவர் கோமா நிலையை 08

முன்வைத்த காலை ஒருபோதும் பின்வைக்கப் போவதில்லை;

# வாழ்க்கைச் செலவை குறைக்க நிலையான கொள்கை செயற்பாடு



### வாழ்க்கைச் செலவு உப குழுவினருடனான சந்திப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு

முன்வைத்த காலை பின்வைக்காது, எடுத்த தீர்மானங்களை நிலையான கொள்கையிலிருந்து செயற்படுத்தி வாழ்க்கைச் செலவை குறைப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

உள்நாட்டு விவசாயம் மற்றும் விவசாயிகளின் வாழ்க்கையை கட்டியெழுப்புவதற்காக எடுக்கப்பட்ட தீர்மானத்தின் காரணமாக மஞ்சள் உள்ளிட்ட ஒரு சில நுகர்வு பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளன. விலையை கட்டுப்படுத்துவதற்கு அல்லது குறைப்பதற்கு மஞ்சள்மற்றும் ஏனைய பொருட்களை இறக்குமதி செய்வதால் எந்தவொரு காலத்திலும் எதிர்பார்த்த இலக்கை நோக்கி செல்ல முடியாதெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறுகிய கால கஷ்டங்கள் ஏற்பட்டாலும் கிராமிய பொருளாதாரத்தை பலப்படுத்தி விவசாயிகளை கட்டியெழுப்புவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையில் இருந்து பின்னோக்கி செல்ல மாட்டேன் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உப குழுவின் முதலாவது கூட்டத்திலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

சில அத்தியாவசிய 08



## வாகனங்களின் விலையில் திடீரென பாரிய அதிகரிப்பு



வாகனங்களின் விலை பாரியளவில் அதிகரித்துள்ளதாக அகில இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. சந்தையில் வாகனத்திற்கான கேள்வி அதிகரிப்பே விலையேற்றத்திற்கான காரணம் என சங்கத்தின் தலைவர் இந்திக சம்பத் மெரன்ஜிகே தெரிவித்துள்ளார். எதிர்காலத்தில் போதியளவு வாகனங்களின் இறக்குமதியை எதிர்பார்ப்பதாக 08

## ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஆஜராக பதில் பொலிஸ் மாஅதிபருக்கு அழைப்பு



அரசியல் பழிவாங்கல் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவில் ஆஜராகுமாறு பதில் பொலிஸ் மாஅதிபர் சி.டி. விக்ரமரத்னவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் ஆணைக்குழுவில் ஆஜராக அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த வருடம் ஜனவரியில் உயர் அதிகாரமுள்ள ஜனாதிபதி அணைக்குழுக்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்தார்.

கடந்த ஆட்சியின் போது அரசியல் பழிவாங்கல் 08

## கலைஞர் விருது விழாக்கள் அடுத்த வருடம் முதல் அனைத்து மாவட்டங்களிலும்

### பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று அறிவிப்பு



இம்முறை ஒரு மாவட்டத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ள கலைஞர் விருதுகள் அடுத்த முறை முதல் நாடு முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட வேண்டும் என்று பிரதமர் அறிவுறுத்தியுள்ளார்.

இதுவரை ஒரு குறையாக காணப்பட்ட 08

கொரோனாவுக்கு எதிரான போராட்டம்;

## ஜனாதிபதி கோட்டாவிற்கு அமெரிக்கா வாழ்த்து



கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தை வெற்றி கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அமெரிக்க ஜனாதிபதி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் பாதுகாப்பு செயலாளர் டாக்டர் மார்க் டி. எஸ்பர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் ஞாயிற்றுக்கிழமை தொலைபேசியில் உரையாடல் ஒன்றினை மேற்கொண்டுள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள 08

## மாடி வீடு எனும் போலியான கதைகளை நம்ப வேண்டாம்

### தனி வீடுகளே எமது திட்டம் - ஜீவன்



மாடிவீடு என்ற போலிக் கதைகளை நம்ப வேண்டாம், தனி வீடுகளையே நாம் அமைப்போம் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் கீழ் இயங்கும் தொண்டமான் கலாசார நிலையத்தில், 9ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நேற்று நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். 08

## அமெரிக்க நிதி உதவியில் சம்பூரில் புதிய பாடசாலை

### தூதுவரும் ஆளுநரும் திறந்து வைத்தனர்



இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ் சம்பூரில் புதிய கூனித்தீவு நாவலர் பாடசாலையை அண்மையில் திறந்து வைத்தார்.

எட்டு வகுப்பறைகளுடன் கூடிய இரண்டு மாடி வகுப்பறை கட்டிடம், 30,000 லீற்றர் கொள்ளளவுடைய சேமிப்புத் தொட்டியுடன் கூடிய மழைநீர் சேகரிப்பு முறைமை, மற்றும் மாணவ, மாணவியர், ஆசிரியர்கள் மற்றும் அங்கவீனமுடையோருக்கான வசதிகளுடன் கூடிய கழிவறைகள் என்பன இந்த புதிய வசதித் திட்டத்தில் 08

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை;


## முன்னாள் பிரதமர் ரணிலிடம் 4 மணிநேரம் வாக்குமூலம் பதிவு

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு முன் நேற்று (31) காலை ஆஜரானார். இவரிடம் சுமார் 4 மணிநேரம் வாக்குமூலம் பதியப்பட்டதாக அறிய வருகிறது. வாக்குமூலம் ஒன்றை 08



## தலைவராக தெரிவாகும் நபருக்கே தேசிய பட்டியல்

### அப்பதவிக்கு இதுவரை 8 பேர் போட்டி



ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்படவுள்ளவருக்கே தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்க அக்கட்சி உயர்பீடம் உத்தேசித்திருக்கின்றது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த வாரம் ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு கூடுகின்றது. இதன்போது புதிய தலைவர் மற்றும் தேசியப்பட்டியல் பதவிகளுக்குப் பொருத்தமான ஒருவர் தெரிவுசெய்யப்பட்டு அறிவிக்கப்படுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான கரு ஜயசூரிய, ரவி கருணாநாயக்க, வஜிர அபேவர்தன, ருவன் விஜேவர்தன, அர்ஜுன ரணதுங்க என எட்டுப் பேர் கட்சித் தலைவர் பதவிக்காக தற்போது களத்தில் இறங்கியுள்ளனர்.

## மக்கள் சக்தி என் பக்கமே

### விரைவில் பதில்



மத்தியகுழு, தேசிய சபை என்பவற்றையெல்லாம் விடவும் மக்கள் சக்திக்கே வலிமை அதிகம். அந்தவகையில் மக்கள் என் பக்கமே நிற்கின்றார்கள். கடந்த பொதுத்தேர்தலின்போதும் இது உறுதியானது " என்று மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவரான அமரர் 08

## ம.ம.முன்னணியின் சகல பொறுப்புகளில் இருந்தும் அனுசா சந்திரசேகரன் நீக்கம்

### கட்சியின் செயலாளர் நாயகம் அறிவிப்பு



**ஹற்றன் சுழற்சி நிருபர்**

மலையக மக்கள் முன்னணியின் அனைத்து பொறுப்புகளில் இருந்தும் கட்சியின் அடிப்படை உறுப்புரிமையில் இருந்தும் பிரதி பொதுச் செயலாளர் பதவியில் இருந்தும் அனுசா சந்திரசேகரன் வெளியேற்றப்பட்டுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் ஏ.லோரன்ஸ் தெரிவித்துள்ளார்.

ஹற்றன் மலையக மக்கள் முன்னணியின் தலைமைக்காரியாலயத்தில் மலையக மக்கள் முன்னணியின் தேசிய சபை கூட்டம் நேற்று (31) நடைபெற்றது. இதன்பின் ஊடகவியலாளர் சந்திப்பை ஏற்படுத்தி இந்த கருத்தை வெளியிட்டார். மலையக மக்கள் முன்னணியின் 08

## வடமேல், ஊவா ஆளுநர்கள் நேற்று சத்தியப் பிரமாணம்



வட மேல் மற்றும் ஊவா மாகாணங்களுக்கான ஆளுநர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று (31) சத்தியப் பிரமாணம் செய்துக் கொண்டார்கள். வட மேல் மாகாண ஆளுநராக கடமையாற்றிய ஏ.ஜே.எம். முசாமில், ஊவா மாகாண ஆளுநராக சத்திய பிரமாணம் செய்துக் கொண்டுள்ளார். இதேவேளை, ஊவா மாகாண ஆளுநராக கடமையாற்றிய ராஜா கொள்ளுரே, வட மேல் மாகாண ஆளுநராகவும் சத்திய பிரமாணம் செய்து கொண்டார்.

## ஐ.தே.கவின் நிலை பெயரளவில் மட்டுமே!

### ரஞ்சித் மத்தும பண்டார



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக சிறந்த ஒருவர் தெரிவுச் செய்யப்பட்டால் அவருடன் கூட்டணி அமைத்து செயற்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

இதேவேளை பொதுத் தேர்தல் முடிவுகளின் பின்னர் ஐ.தே.க. பெயரளவிலான கட்சியாக மாத்திரமே இருப்பதாகவும் அதனால் , மோசடி குற்றச்சாட்டுகளற்றவர்கள் எம்முடன் இணைந்து செயற்படுமாறும் இதன்போது 08



காணாமல்போன உறவுகளை தேடி நடந்த ஆர்ப்பாட்டத்தை பார்க்கும்போது கண்கள் கலங்குதே ஐயா...

உண்மை தான் அப்பு, அதில மாற்றுக் கருத்துக்கு இடமில்லை, ஆனால் அதை வைச்சு பேஸ்புக்ல படம் காட்டுற சில அரசியல்வாதிகளை நினைச்சா என்ர கண்கள் கலங்குது!

## காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள் மன்னாரில் கவனயீர்ப்பு போராட்டம்

### ஜனாதிபதிக்கு மன்னார் மேலதிக அரச அதிபரிடம் மகஜர்

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று காலை மன்னாரில் காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

மன்னார் பிரஜைகள் குழுவின் அனுசரணையுடன்,மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று காலை 9.30 மணியளவில் மன்னார் பஸார் பகுதியில் இடம்பெற்றது.

இதன் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஒன்று கூடி பல்வேறு வசனங்கள் 08



## மட்டு. மாவட்ட ஊடகப் பிரிவிற்கு அமைச்சர் வியாழேந்திரன் விஜயம்

### எதிர்கால செயற்பாடுகள், குறைபாடுகள் குறித்து ஆராய்வு



அரசாங்க தகவல் திணைக்கள மட்டக்களப்பு மாவட்ட ஊடகப் பிரிவிற்கு தபால் சேவைகள் வெகுஜன ஊடக தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் நேற்று திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

அரசினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி சார்ந்த தகவல்கள் மற்றும் செய்திகள், ஊடக அறிக்கைகள், அமைச்சரவைத் தீர்மானங்கள் மற்றும் உத்தியோகபூர்வ நிகழ்வுகள் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்தும் இப்பிரிவின் செயற்பாடுகள், எதிர்காலத் திட்டங்கள் மற்றும் குறைநிறைகள் 08

# நாட்டில் சுற்றாடலுக்கு பாதிப்பில்லாமல் மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படும்

## லங்காகமயில் ஜனாதிபதி தெரிவிப்பு

சுற்றாடலுக்கு பாதிப்பில்லாத வகையில் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவது தனது எதிர்பார்ப்பாகுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நெலுவ லங்காகம வீதி புனர்நிர்மாணத்தின் போது சிங்கராஜ வனப்பூங்காவிற்கு பாதிப்பு ஏற்படுவதாக இலத்திரனியல், அச்சு மற்றும் சமூக ஊடகங்களில் கடந்த சில நாட்களாக பிரசாரம் செய்யப்பட்டது. அதன் உண்மைத்தன்மை பற்றி நேரில் கண்டறிவதற்காகவும் நிபுணர்கள் மற்றும் பிரதேச மக்களின் கருத்துக்களை கேட்டறிவதற்காகவும் ஜனாதிபதி (29) நெலுவ லங்காகம பிரதேசத்திற்கு சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்டார்.

சிங்கராஜ வனப்பூங்கா மற்றும் வீதி புனரமைப்புக்கு உள்ளாகும் கிராம பிரதேசங்களில் சுற்றாடல் முறைமையை பாதுகாத்து நீண்டகாலமாக இருந்து வரும் மக்களின் தேவையான வீதி நிர்மாணப் பணிகளை முன்னெடுக்க வேண்டுமென ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

லங்காகம கிராமம் வலகம்பா மன்னர் காலம் வரை நீண்ட வரலாற்றைக் கொண்ட கிராமமாகும். தேயிலை பயிர்ச் செய்கை இப்பிரதேசத்தின் பிரதான வாழ்வாதாரமாகும். 100 வருடங்களுக்கு மேலாக கிராமவாசிகள் சிங்கராஜ வனப்பூங்காவை அண்மித்ததாக உள்ள வீதியின் தெனியாய மற்றும் நெலுவ பகுதிகளுக்கு தேயிலை கொழுந்தை எடுத்துச் செல்கின்றனர்.

நெலுவ, உடுகம, கராபிட்டிய வைத்தியசாலைகளுக்கு நோயாளிகளை எடுத்துச் செல்வதற்கும் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் மற்றும் நாளாந்த ஜீவனோபாய நடவடிக்கைகளில் வீதிப் போக்குவரத்து பெருந் தடையாக உள்ளது. இதற்கு தீர்வாக "நெலுவ – லங்காகம பிட்டதெனிய" வீதி புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.





சிங்கராஜ வனப்பூங்காவிற்கு பாதிப்பு ஏற்படுவதாக சூழலியலாளர்கள் சிலர் முன்வைத்த குற்றச்சாட்டு காரணமாக புனரமைப்பு பணிகளை நிறுத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்திருந்தார்.

வீதி அபிவிருத்தி, வன ஜீவராசிகள், வனப்பூங்கா, சுற்றாடல் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து அமைச்சு அதிகாரிகளுடனும் புனரமைக்கப்படும் வீதியை ஜனாதிபதி பார்வையிட்டார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கண்காணிப்பின் கீழ் இராணுவத்தினர் வீதி புனர்நிர்மாணப் பணிகளை பொறுப்பேற்றுள்ளனர். 18 கிலோமீற்றர் தூரத்தை 03 மாதக் காலப்பகுதியில் நிறைவு செய்வதற்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. வீதி நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் லங்காகமவிலிருந்து தெனியாயவிற்கு செல்வதற்கு செலவான சுமார் 04 மணி நேரம் 45 நிமிடங்களாக குறைவடையும்.

புனர்நிர்மாணப் பணிகளின் போது வனப்பூங்காவிற்கு அல்லது சுற்றாடல் முறைமைக்கு பாதிப்பு ஏற்படக்கூடாதென ஜனாதிபதி கடுமையாக அறிவுறுத்தியுள்ளார். புனர்நிர்மாணப் பணிகளின் பின்னர் நெலுவையிலிருந்து தெனியாயவிற்கு பஸ் வண்டி ஒன்றை நாளாந்தம் சேவையில் ஈடுபடுத்துவதற்கும் தீர்மானிக்கப்பபட்டது.

லங்காகம கிராமத்திலுள்ள சங்கிலிப் பாலத்திற்கு பதிலாக 120 அடி நீளமும் 6 அடி அகலமும் கொண்ட பாலம் ஒன்றும் இதனுடன் இணைந்ததாக நிர்மாணிக்கப்படுகின்றது. சுமார் 700 குடும்பங்கள் வசிக்கும் லங்காகம பிரதேசத்தில் அனைத்து குடும்பங்களுக்கும் 03 மரக்கன்றுகள் வீதம் இலவசமாக வழங்கி 2,100 மரக் கன்றுகளை நாட்டி அவர்களினாலேயே வனப்பூங்காவிற்கு பங்களிப்பு செய்வதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர, பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன, இராஜாங்க அமைச்சர் மொஹான் பி. த சில்வா, பாராளுமன்ற உறுப்பினர்களான சம்பத் அத்துகோரல, நிபுன ரணவக்க, சந்திம வீரக்கொடி, வீரசுமன வீரசிங்க ஆகியோரும் மாகாண ஆளுநர் விலீ கமகே மற்றும் அமைச்சு அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டனர்.

### 90 நாட்களில் நெலுவ -லங்காகம வீதி புனரமைப்பு





## உலக செய்திகள்

# இராஜதந்திர உறவை ஏற்படுத்த அரபு நாடுகளுடன் இஸ்ரேல் இரகசிய பேச்சு

இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்துவது குறித்து பல அரபு நாடுகளுடனும் இரகசிய பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாக இஸ்ரேல் பிரதமர் பென்ஜமின் நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு இடையே நேற்று முதலாவது வர்த்தக விமானப் பயணம் இடம்பெற்றதை ஒட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை கருத்து வெளியிடும்போதே நெதன்யாகு இதனைத் தெரிவித்தார்.

"இஸ்ரேல் நாட்டுடன் உறவை ஏற்படுத்துவதற்கு அரபு மற்றும் முஸ்லிம் தலைவர்களுடன் பல வெளியிடப்படாத பேச்சுகளும் இடம்பெற்று வருகின்றன" என்று அந்த நாடுகளின் பெயர்களை குறிப்பிடாமல் நெதன்யாகு தெரிவித்தார்.

அமெரிக்காவின் மத்தியஸ்தத்தில் இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு இடையிலான இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தும் அறிவிப்பு கடந்த ஓகஸ்ட் 31 ஆம் திகதி வெளியானது.

ஜோர்தான் மற்றும் எகிப்துக்கு பின்னர் இஸ்ரேலுடன் உறவை ஏற்படுத்தும் மூன்றாவது அரபு நாடாகவும் முதல் வளைகுடா நாடாகவும் ஐக்கிய அரபு இராச்சியம் உள்ளது.

இந்நிலையில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தூதுவர்களை ஏற்றிய முதலாவது வர்த்தக விமானம் இஸ்ரேலில் இருந்து ஐக்கிய அரபு இராச்சியத்தை வந்தடைந்துள்ளது.

இதில் அமெரிக்க தூதுக் குழுவுக்கு அந்நாட்டு ஜனாதிபதியின் மருமகனும் வெள்ளை மாளிகை ஆலோசகருமான ஜெரட் குஷ்னர் தலைமை ஏற்கிறார்.

இதன்போது இஸ்ரேலிய விமானங்களுக்கு தடையுள்ள சவூதி வான் பகுதியை தாண்டியே இஸ்ரேலிய விமான ஐக்கிய அரபு இராச்சியத்தை அடைந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் குஷ்னரை அருகில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய நெதன்யாகும், "இன்றைய திருப்பம் நாளை வழக்கமானதாக அமையும். இது ஏனைய நாடுகளும் இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவை ஏற்படுத்த வழியை உருவாக்கும்" என்றார்.

ஐக்கிய அரபு இராச்சியம் சென்றிருக்கும் இஸ்ரேல் தூதுக் குழுவுக்கு



தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மீர் பென் சப்பட் தலைமை வகிக்கிறார்.

அபூதாபியில் இடம்பெறும் பேச்சுவார்த்தையில் இரு தரப்புக்கும் இடையிலான விமானப் போக்குவரத்து, சுற்றுலா, வர்த்தகம், சுகாதாரம், சக்திவலு மற்றும் பாதுகாப்பு குறித்து ஒத்துழைப்பை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படும் என்று நெதன்யாகு குறிப்பிட்டார்.

இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு இடையிலான உடன்பாடு எட்டப்பட்டது தொடக்கம் இரு தரப்புக்கும் இடையே அடிக்கடி தொலைபேசி உரையாடல்கள் இடம்பெற்று வருவதோடு வர்த்தக உடன்படிக்கைகள் எட்டப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக இஸ்ரேலை புறக்கணிக்கும் 1972 இன் சட்டத்தை ஐக்கிய அரபு இராச்சியம் கடந்த சனிக்கிழமை நீக்கியது. இதன்மூலம் இஸ்ரேலுடன் வர்த்தகம் செய்யவும் இஸ்ரேல் பொருட்களை வாங்கவும் வழி ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் உறவை கடுமையாக எதிர்க்கும் பலஸ்தீனர்கள் இது 'முதுகில் குத்தும் செயல்' என்று ஐக்கிய அரபு இராச்சியத்தை சாடுகின்றனர்.

எனினும் இந்த விவகாரம் தொடர்பில் கடந்த பல தசாப்த காலமாக இருக்கும் கொள்கையில் தொடர்ந்து நீடிப்பதாக சவூதி அரேபியா குறிப்பிட்டுள்ளது. பலஸ்தீன நாடு ஒன்றை ஏற்படுத்தும் அமைதி உடன்படிக்கையில் கைச்சாத்திடும் வரை இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவு இல்லை என்று அது குறிப்பிட்டுள்ளது.

# இந்தோனேசியாவில் எளிதில் தொற்று கொரோனா வகை

இந்தோனேசியாவில் இன்னும் எளிதில் தொற்றக்கூடிய கொரோனா வைரஸ் வகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டும் அங்கு 2,300க்கும் மேற்பட்ட வைரஸ் தொற்றுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக இந்தோனேசிய சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. தற்போது அங்கு சுமார் 172,000 பேர் நோய்வாய்ப்பட்டுள்ளனர். சுமார் 7,300 பேர் உயிரிழந்துள்ளனர்.

டி614ஜி ரக கொவிட்–19 வைரஸ் எளிதில் தொற்றினாலும் அதன் தாக்கம் குறைவாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இந்தோனேசியாவில் அண்மை நாட்களாக வைரஸ் தொற்று எண்ணிக்கை அதிகரித்திருப்பதால், அது குறித்து மேலும் ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.



டி614ஜி வகை வைரஸ் முதலில் பெப்ரவரி மாதம் ஐரோப்பாவில் கண்டுபிடிக்கப்பட்டதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்தது. சிங்கப்பூர், மலேசியாவிலும் அந்த வைரஸ் ரகம் கண்டுபிடிக்கப்பட்டது.இந்தோனேசியர்கள் மேலும் விழிப்புநிலையில் இருக்கவேண்டும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. அங்கு ஆண்டு இறுதிக்குள் 500,000 வைரஸ் தொற்றுச் சம்பவங்கள் பதிவாகக் கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

# தாய்வானில் பட்டத்தோடு பறந்த 3 வயது சிறுமி மீட்பு

தாய்வானில் பட்டத்தின் வால்களில் சிக்கி வானில் பறந்த மூன்று வயதுச் சிறுமி காயமின்றிக் காப்பாற்றப்பட்டாள்.



கடலோரம் உள்ள நன்லியொவில் நடைபெற்ற பட்டம் விடும் நிகழ்ச்சியில் அந்தக் குட்டிப் பெண்ணும் கலந்துகொண்டாள். வால்கள் கொண்ட ஒரு பெரிய செம்மஞ்சள் நிறப் பட்டத்தில் அந்த சிறுமி மாட்டிக்கொண்டாள்.

பட்டத்தின் வாலை இறுக்கமாகப் பிடித்துக்கொண்ட அந்தச் சிறுமி பல முறை வானில் சுழற்றப்பட்டது சம்பவ இடத்தில் எடுக்கப்பட்ட வீடியோவில் தெரிந்தது.

சிறுமி பயந்து காணப்பட்டபோதும் எந்தக் காயமும் ஏற்படவில்லை என ஊடகங்கள் கூறின. சம்பவத்திற்குப் பின்னர் பட்டம் விடும் நிகழ்ச்சியை அதிகாரிகள் நிறுத்தினர்.

நடந்த சம்பவத்திற்காக வருந்துவதாகவும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இந்த விழா உடன் இடைநிறுத்தப்படுவதாகவும் ஹிசிசு ஆளுநர் லின் சின் சியென், பேஸ்புக்கில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அந்த பட்டம் பறக்கவிடும் விழா இடம்பெறும்போது அங்கு காற்று வேகமாக வீசிக்கொண்டிருந்தது. அது மணிக்கு 50 தொடக்கம் 61 கிலோமீற்றர் வேகத்தில் இருந்தாக கூறப்படுகிறது.

# உலக வர்த்தக அமைப்பின் இயக்குநர் நாயகம் விலகல்



உலக வர்த்தக அமைப்பின் இயக்குநர் நாயகம் ரொபர்டோ அசெவெடோ நேற்று பதவியில் இருந்து முறையாக விலகினார்.

உலக வர்த்தக அமைப்பின் தலைவராக முதன்முறையாக 2013 ஆம் ஆண்டு அசெவெடோ நியமிக்கப்பட்டார். 4 ஆண்டு பதவிக் காலத்துக்கு பின்னர் 2017 ஆம் ஆண்டு 2ஆவது முறையாக மீண்டும் அவரை உலக வர்த்தக அமைப்பின் உறுப்பினர்கள் நியமித்தனர்.

இந்த நிலையில் ஒரு தலைப்பட்சம், பாதுகாப்புவாதம் உள்ளிட்ட முன்னோடியில்லாத சவால்களை காரணம் காட்டி கடந்த மே 14 ஆம் திகதி தனது பதவி விலகல் குறித்து அசெவெடோ அறிவித்தார்.

# கட்டாரில் தொழிலாளர்களுக்கு 'குறைந்தபட்ச சம்பளம்' அமுல்

வெளிநாட்டு தொழிலாளர்களை நடத்தும் விதம் குறித்து கடும் விமர்சனங்கள் எழுந்த நிலையில் கட்டார் தொழில்துறை அமைச்சு 275 டொலர் மாதாந்த குறைந்தபட்ச சம்பளத்தை அறிமுகம் செய்திருப்பதோடு தொழிலாளர்கள் மாறுவதற்கான நடைமுறையும் இலகுவாக்கப்பட்டுள்ளது.

கட்டார் மக்கள் தொகையில் 90 வீதமாக இருக்கும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான நிலையை மேம்படுத்துவதில் குறைபாடு இருப்பதாக மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த ஆண்டு ஒக்டோபர் 16 ஆம் திகதி அறிவிக்கப்பட்ட புதிய சட்டங்களை அமுலாக்குவது தொடர்பில் தற்போதே கைச்சாத்திடப்பட்டுள்ளது. இதில் தொழிலாளர் தமது தொழிலை மாற்றுவதற்கு 'ஆட்சேபனை இல்லை' என்ற சான்றிதழை பெறுவது நீக்கப்பட்டுள்ளது.

தவிர உள்நாட்டு பணியாளர்கள் உட்பட அனைத்து தொழிலாளர்களுக்கும் முழுநேர மாத தொழிலுக்கு குறைந்தது 1,000 ரியால் (275 டொலர்) சம்பளம் வழங்க வலியுறுத்தப்பட்டுள்ளது. இது மணிக்கு 1.30 டொலருக்கு நிகராகும்.

தவிர படுக்கை, தங்குமிடம் அல்லது உணவு மற்றும் தங்குமிடத்திற்காக மாதம் ஒன்றுக்கு மேலதிகமாக 800 ரியால் கொடுப்பனவை வழங்கவும் தொழில் வழங்குனர்கள் கோரப்பட்டுள்ளனர். புதிய குறைந்தபட்ச சம்பளம் ஆறு மாதங்களுக்குள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக தற்காலிக சம்பளமாக மாதத்திற்கு 750 ரியால் (206 டொலர்) நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

2020 செப்டெம்பர் 1 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN

தினகரன் விளம்பரம் 0112429367 விற்பனை பிரிவு 0112429444, 0112429378 ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

01ஆம் திகதி

**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 04.47 |
| லுஹர் | 12.12 |
| அஸர் | 03.16 |
| மஃரிப் | 06.18 |
| இஷா | 07.29 |

**இன்றைய சுபதினம்**

சார்வரி வருடம் ஆவணி 16

ராகுகாலம் : மாலை : 3.00 – 4.30வரை

சுபநேரம் : காலை : 7.30 – 9.00வரை

யோகம்: சித்த மரணயோகம்

நட்சத்திரம்: அவிட்டம் மாலை 5.56

திதி: பவுர்ணமி

## சு.க 69 வருட நிறைவை முன்னிட்டு சமய வழிபாடுகள் ஏற்பாடு



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் 69 வது வருடாந்த நிறைவின் நிமித்தம் பௌத்த, இந்து இஸ்லாமிய மற்றும் கத்தோலிக்க சமய நிகழ்வுகள் நாளை (02 ஆம் திகதி) இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் இஸ்லாமிய சமய நிகழ்வுகளின் கீழ் விஷேட துஆ பிரார்த்தனை கொழும்பு தெவட்டகஹ ஜும்ஆ பள்ளிவாசலில் நாளை காலை 10.00 மணிக்கு 08



ஊவா மாகாண ஆளுநராக ஏ.ஜே.எம். முசாமிலும் வட மேல் மாகாண ஆளுநராக ராஜா கொள்ளுரேயும் ஜனாதிபதி முன்னிலையில் நேற்று சத்திய பிரமாணம் செய்துகொண்ட போது பிடிக்கப்பட்ட படம்

## நாணயமாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை |
|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 |
| குவைத் டினார் | 603.09 |
| ஓமான் ரியால் | 483.42 |
| கட்டார் ரியால் | 50.73 |
| சவூதி ரியால் | 49.54 |
| ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

## கல்வி, கைத்தொழில்துறை அபிவிருத்திக்கு உதவ சீன அரசாங்கம் இணக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டின் கல்வி மற்றும் தொழிற் கல்வி அபிவிருத்தி, ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள கைத்தொழில், மற்றும் டயர் தொழிற்சாலை செயற்றிட்டங்களில் உதவுவதற்கு சீனா இணக்கம் தெரிவித்துள்ளது.

சீனத் தூதுவர் ஹுவெய்க்கும் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிசுக்குமிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதே இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

சீனத் தூதுவர் ஹுவெய்க்கும் கல்வி அமைச்சருக்குமிடையில் பேச்சுவார்த்தையொன்று கல்வியமைச்சில் இடம்பெற்றுள்ளது. மேற்படி பேச்சுவார்த்தையின் போது நாட்டின் கல்வித் துறை மற்றும் தொழிற்கல்வி ஆகியவற்றில் அபிவிருத்தியை மேற்கொள்ளும் வகையில் மேற்கொள்ள வேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் கல்வி அபிவிருத்தி தொடர்பில் கல்வி அமைச்சு மேற்கொள்ளும் செயற்திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நீண்ட கால வேலைத் திட்டங்கள் தொடர்பில் சீன அரசாங்கம் எவ்வாறு உதவ முடியும் எனவும் இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

குறிப்பாக பாடசாலைக் கல்வி, உயர் கல்வி, தொழிற் கல்வி ஆகிய துறைகளை அபிவிருத்தி செய்வதற்கு சீன 08

## கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்த நாடளாவிய ரீதியில் 4000 சிறிய பாலங்கள்

### அடுத்த வாரம் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிப்பு

பின்தங்கிய கிராமங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடனும் உள்நாட்டு வெளிநாட்டு கைத்தொழிற்துறையை ஊக்குவிக்கவும் என கிராமிய மட்டத்தில் 4000 சிறிய பாலங்களை நிர்மாணிக்க அடுத்த வாரம் அமைச்சரவைக்கு அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பிக்க உள்ளதாக கிராமிய வீதி மற்றும் உட்கட்டமைப்பு வசதி இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தெரிவித்தார். கயிற்றுப் பாலங்கள் மற்றும் மரப்பாலங்களுக்கு பதிலாக புதிய சிறிய ரக பாலங்கள் நிர்மாணிக்க உள்ளதாகவும் அவர் கூறினார்.

விதி அபிவிருத்தி தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளுடன் நேற்று நடைபெற்ற சந்திப்பிலே அவர் இதனை தெரிவித்தார்.



பின்தங்கிய மாகாணங்களில் வாழும் மக்களுக்கு தமது உற்பத்திகளை சந்தைப்படுத்த முடியாமல் அவை நாசமடைவதால் தமது பொருட்களுக்கு உரிய விலை பெற முடியாதுள்ளது. 08

## மத்தள ராஜபக்ச விமான நிலையத்தினை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**



மத்தள ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தினை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென சுற்றலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

புதிய அரசாங்கம் பதவியேற்று அமைச்சர்களாக நியமிக்கப்பட்டு பதவியேற்றதினை தொடர்ந்து மத்தல ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்திற்கு (30) விஜயம் செய்து அதனை பார்வையிட்டார். இதன் போதேஅமைச்சர்இவ்வாறுதெரிவித்தார்.

இதன் போது அமைச்சர்களான சமல் ராஜபக்ச, நாமல் ராஜபக்ச, பிரதியமைச்சர் டி. வி. சானக, பாராளுமன்ற உறுப்பினர்களான உபுல் கலப்பத்தி, அஜித் ராஜபக்ச,விமான நிலைய மற்றும் விமானசேவைகள் நிறுவனத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் ஜீ. ஏ. சந்திரசிறி மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் எஸ். ஹெட்டி ஆரச்சி ஆகியோருடன் அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, தற்பொழுது உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள கொவிட் 19 நிலைமையின் காரணமாக எமக்கு விமான நிலையத்தினை திறப்பதற்கு முடியாமல் உள்ளது. இருந்தாலும் சுகாதாரத் துறையினர் இதற்கான அனுமதியினை வழங்குவார்களேயானால் விமான நிலையத்தினை எம்மால் திறக்க முடியும். கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தல ராஜபக்ச சர்வதேச விமான நிலையம் என்பனவற்றினை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கான 08



புத்தசாசன, கலாசார அலுவல்கள் மற்றும் மதவிவகார அமைச்சின் ஊடக செயலாளரும் சிரேஸ்ட ஊடகவியலாளருமான ஜெயரஞ்ஜன் யோகராஜுக்கு இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன வளாகத்தில் வைத்து, இரத்மலானை விமலாராமயவைச் சேர்ந்த சங்கைக்குரிய திருநெல்வேலி போதி தர்மர் அரவணடிகள் ஆசி கூறி பிரித் நூல் கட்டுவதைப்படத்தில் காணலாம்.

## மணவை தம்பியின் 13ஆம் ஆண்டு நினைவு தினம்



இலங்கை தி.மு.க. முன்னால் பொதுச் செயலாளர் ஏ. எஸ். மணவைத்தம்பி அவர்கள் மறைந்து இன்று 13 ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. தென்னிந்தியாவில் மணப்பாடு என்ற கிராமத்தில் 1.11.1929 ஆண்டு பிறந்தார். இலங்கையில் அனைத்து அரசியல் தலைவர்களிடமும் அன்பு பாராட்டினார். தமிழகத்தில். தி.மு.க. செயற் குழு உறுப்பினர் பதவி வகித்தார். கலைஞர். மு. கருணாநிதி அவர்களின் நெருக்கமாகஇருந்தார். 08

## வீதி விபத்தில் வயோதிப பெண் பலி

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டவில்லு, கியுல வீதியில் ஞாயிற்றுக்கிழமை (30) இடம்பெற்ற வீதி விபத்துச் சம்பவத்தில் வயோதிப பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புத்தளம் அட்டவில்லு பகுதியைச் சேர்ந்த 78 வயதுடைய வயோதிப பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துச் சம்பவம் இடம்பெற்ற மேற்படி தினத்தில் கியுல பகுதியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறியொன்று, அதே திசையை நோக்கிப் பயணித்த கெப் ரக வண்டி ஒன்றை 08

## தூதரக சேவைக்கு புதியவர்களை நியமிக்கும் பணிகள் ஆரம்பம்

### சேவையில் உள்ளோர் நாட்டுக்கு அழைப்பு



தூதுவராலயங்களில் பணிக்கமர்த்தப்படும் புதிய பணியாளர்கள் விபரங்களை அனுமதிக்காக ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பியுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இதுவரை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மூலம் தூதுவராலய கடமைகளுக்காக சென்றிருந்த கடமைக்காலம் நிறைவடைந்தவர்கள் மீள நாட்டிற்கு அழைத்து வரப்படவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த அரசாங்கத்தினால் நியமனம் வழங்கப்பட்ட பொருத்தமற்ற பலர் தூதரகங்களில் இருப்பதாக தெரிவித்த அமைச்சர், இனிமேல் அரச சேவையிலுள்ளவர்கள் மட்டுமே தூதுவராலய கடமைகளுக்காக இணைத்துக்கொள்ளப்படுவர் எனவும் தெரிவித்தார்.

கடந்த ஆட்சியில் அரசியல் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டதோடு தகுதியில்லாதவர்கள் பலரும் தூதரக சேவைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நோன்மதி தின கலந்துரையாடல்கள் தேசிய தொலைக்காட்சியில்



இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தமிழ் அலைவரிசையான நேத்திரா ரி வி யில் ஒவ்வொரு மாதமும் நோன்மதி தினத்தன்று விசேட பௌத்த கலந்துரையாடல் தமிழ் மொழியில் ஒளிபரப்பாகி வருகிறது.

தமிழ் பேசும் மக்களுக்கு பௌத்த தர்மம் தொடர்பான விளக்கம் ஒன்றை வழங்கும் நோக்கிலேயே, இந்த நிகழ்ச்சி நேரடி ஒளிபரப்பாக இடம்பெற்று வருகிறது. நோன்மதி தினத்தன்று காலை 9 மணி முதல் 11 மணிவரை நேரடி ஒளிபரப்பாக நேத்ரா ரி வியில் இடம்பெற்று வருகிறது.சில சந்தர்ப்பங்களில் அவை பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சியாகவும் அமைகிறது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

2019 நவம்பர் மாதம் 16ம் திகதி ஜனாதிபதி தேர்தல் வெற்றிக்கு பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஸ தலைமையிலான அரசாங்கத்தின் கீழ் பல்வேறு மத நல்லிணக்க செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகஸ்ட் 5ம் திகதி இடம்பெற்ற பொது தேர்தலில் மாபெரும் வெற்றியை பதிவு செய்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பாண்மையுடன் 08

## அதிக வெப்பத்தினால் கண்களுக்கு பாதிப்பு

### கண் நோய் நிபுணர்கள் எச்சரிக்கை



தற்போது நிலவும் அதிக வெப்பம் காரணமாக கண்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடும் என கண் நோய் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் வெளியில் செல்லும்போது கண்ணாடிகளை பயன்படுத்துமாறு தேசிய கண் வைத்தியசாலையின் விசேட கண் நோய் நிபுணர் முதிதா குலதுங்க கோரியுள்ளார்.

வெப்பம் காரணமாக கண் பார்வைக்கான பகுதியில் 08

## மஞ்சள் விற்பனை தொடர்பில் இனி சுற்றிவளைப்புகள்



மஞ்சள் தொடர்பில் நாடு பூராகவும் மேற்கொள்ளப்படும் சுற்றிவளைப்புக்களை தீவிரப்படுத்த பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போதைய நிலையில் மஞ்சள் விற்பனை தொடர்பான குற்றங்கள் காரணமாக 113 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் பிரியந்த விஜேசிங்க குறிப்பிட்டார்.

ஒரு கிலோ கிராம் மஞ்சளுக்காக 750 ரூபாய் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள போதும், குறித்த விலையை விட அதிக விலைக்கு மஞ்சளை விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிராக இவ்வாறு வழக்கு தொடரப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும், காலாவதியான மஞ்சளை விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிராகவும் வழக்கு தொடரப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதேபோல், நாட்டின் பல்வேறு பகுதிகளில் மஞ்சளுடன் பல்வேறு பொருட்கள் கலக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவித்த அவர், தற்போதைய நிலையில் பிரதேசங்கள் சிலவற்றில் 42 மஞ்சள் தூள் மாதிரிகள் பெறப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

குறித்த மஞ்சள் தூள் மாதிரிகள் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றில் 23 மாதிரிகளின் அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் 08

## 20வது அரசியலமைப்புத் திருத்த சட்டமூலம் இவ்வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

உத்தேச 20வது அரசியலமைப்பு திருத்த சட்டமூலத்தை இவ்வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க வாட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சரவை கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் கூடவுள்ளதுடன் அதன்போது அரசியலமைப்பு திருத்த சட்டமூலம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசியலமைப்பு தயாரிப்பு தொடர்பில் நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டிருந்த விசேட குழுவின் யோசனைகள் இவ்வாரத்தில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை; பொதுஜன பெரமுன அரசாங்கத்தின முதலாவது அமைச்சரவை கூட்டத்தின் போது 19வது அரசியலமைப்புத் திருத்தத்தை இல்லாதொழிப்பதற்கான யோசனை 08

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சார்வரி வருடம் ஆவணி மாதம் 16ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 முஹர்ரம் பிறை 12

**குறள் தரும் சிந்தனை**

ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து

*மற்றவர்களை அவர்களின் வழியில் வாழச்செய்து, தானும் அறத்திலிருந்து விலகாமல், மனைவியுடன் வாழும் வாழ்க்கை, துறவறத்தார்காட்டும் பொறுமையிலும் வலிமைமிக்கது.*

# அறிவியல் உலகின் சவால்களை வெற்றி கொள்ளும் கல்வித் திட்டம்

இலங்கையின் கல்வித் திட்டம் விரைவில் மாற்றியமைக்கப்படப் போகின்றது. கடந்த ஓகஸ்ட் 5ம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலையடுத்து பதவியேற்ற புதிய அரசாங்கத்தின் கல்வி அமைச்சரான ஜி.எல். பீரிஸ் இதனை அறிவித்திருக்கின்றார். அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் இருந்து நாட்டுக்குப் பொருத்தமான புதிய கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட இருப்பதாக பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் அறிவித்திருக்கிறார். அதாவது இன்றைய நவீன உலகத்தின் தொழிற்சந்தையை இலக்கு வைத்து, மாணவர்களை அதற்கு ஏற்றாற் போல தயார் செய்யும் வகையில் கல்வித் திட்டம் மாற்றியமைக்கப்பட உள்ளதென்று அவர் அறிவித்துள்ளார்.

சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்திருந்த வேளையில், அன்றைய கல்வியமைச்சரான கலாநிதி பதியுதீன் மஹ்மூத் நாட்டின் கல்வித் திட்டத்தில் பாரிய மாற்றமொன்றை கொண்டு வந்திருந்தார்.

க.பொ.த சாதாரண பரீட்சைக்குப் பதிலாக மாணவர்கள் தேசிய கல்வி பொதுத் தராதர பத்திர பரீட்சைக்கு 9ம் வகுப்பில் தோற்ற வேண்டி இருந்தது. அன்றைய வேளையிலும் மாணவர்களின் எதிர்கால தொழில் வாய்ப்புகளை கருத்தில் கொண்டு தொழில் முன்னிலை கல்வி_1, தொழில் முன்னிலை கல்வி_2 ஆகிய இரு புதிய பாடங்கள் அறிமுகம் செய்யப்பட்டன. அப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் முன்னைய க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குப் பதிலாக எச்.என்.சி.ஈ என்ற உயர்தர வகுப்புக்கு அனுமதிக்கப்பட்டனர். ஆனாலும் சிறிமாவோ பண்டாரநாயக்க அரசாங்கத்தில் அறிமுகம் செய்யப்பட்ட புதிய கல்வி முறைமை எதிர்பார்த்த பலனைத் தரவில்லை.

புதிய பாடத்திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்ட மாணவர்கள் தடுமாற்றமான நிலையில் பாதிக்கப்பட வேண்டி ஏற்பட்டது. அன்றைய கல்வித்திட்ட மாற்றம் பொருத்தமானதாக மாற்றியமைக்கப்படவில்லை. உறுதியான முறையில் முன்னெடுக்கப்படவும் இல்லை. இதன் பின்னர் அக்கல்வித் திட்டம் மீண்டும் மாற்றத்திற்கு உள்ளானது.

இலங்கையின் கல்வி முறையானது இன்றைய நவீன காலத்துக்கு பொருத்தமற்றது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடம் கிடையாது. உலகில் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைந்த பல நாடுகள் தமது கல்வி முறையில் நீண்ட காலத்துக்கு முன்னரே மாற்றத்தை கொண்டு வந்து விட்டன. தொழிற் சந்தை எவ்வாறு அமைகின்றதோ அதற்கேற்றவாறு கல்வித்துறையிலும் மாற்றம் ஏற்படுத்தப்படுவது அவசியமாகும். இல்லாதுபோனால் உயர்தரம் கற்று பட்டம் பெறுகின்ற மாணவர்கள் இன்றைய நவீன காலத்தின் தொழிற் சந்தைக்குப் பொருத்தமற்றவர்களாக அமைவார்கள் என்பதே உண்மையாகும். இதனை எல்லாம் நன்கு உணர்ந்த நிலையிலேயே இன்றைய அரசாங்கம் தொழில் வாய்ப்புக்கு மாணவர்களை தயார் செய்யும் வகையில் கல்வித் திட்டத்தில் மாற்றங்களை மேற்கொள்ள இருக்கின்றது.

கடந்த வருடம் நவம்பர் 16ம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய கோட்டாபய ராஜபக்ஷ தனது உரையின் போது, கல்வித்துறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய அவசியம் குறித்து வலியுறுத்தி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய தொழிற்சந்தைக்கு ஒவ்வாத பட்டப்படிப்புகளை மேற்கொள்வதால் மாணவர்களுக்கு எதுவித பலனும் ஏற்பட்டு விடப் போவதில்லை என்று குறிப்பிட்டிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நவீன காலத்தின் தேவைக்கு ஏற்றவாறு கல்வித் திட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தி இருந்தார்.

இவ்வாறான நிலையிலேயே அடுத்த வருடத்தில் இருந்து கல்வித் திட்டத்தில் மாற்றம் கொண்டு வரப்பட இருக்கின்றது. உலகின் போக்கு இன்று முற்றுமுழுதாக மாற்றமடைந்து விட்டது. தகவல் தொழில்நுட்பம் நன்கு விருத்தியடைந்த அறிவியல் யுகத்தில் நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். உலகில் ஒவ்வொரு துறையிலும் இன்று நவீன அறிவியல் புகுந்து விட்டது. எனவே நாமும் உலகின் நவீன போக்குக்கேற்ப எங்களை தயார் செய்து கொள்ள வேண்டி இருக்கிறது.

பழையன கழிதலும் புதியன புகுதலும் தவிர்க்க முடியாத உலக வழக்காகும். கல்வித் திட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வந்தால் மாத்திரமே நவீன உலகின் சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் எமது மாணவர்களை தயார்படுத்த முடியும். இல்லையேல் உலகின் போக்குக்கு பொருத்தம் இல்லாதவர்களாக நாம் புறந்தள்ளப்படுகின்ற நிலைமை ஏற்படலாம்.

எனவே புதிய கல்வித் திட்டமானது மிகவும் அவசியமானதாகும். பாடசாலையில் கற்கின்ற மாணவர்கள் அத்தனை பேரும் பல்கலைக்கழகத்திற்குள் பிரவேசித்தல் என்பது சாத்தியமான விடயமல்ல. இவ்வாறு பல்கலைக்கழக வாய்ப்பைத் தவற விடுகின்ற மாணவர்களுக்கு எதிர்காலத்துக்கான வழியை காண்பிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. ஆகவேதான் இன்றைய அரசாங்கம் கொண்டு வரப்போகின்ற புதிய கல்வித் திட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது.

editor.tkn@lakehouse.lk

# உயிர்களைத் துன்புறுத்தாமையே நோயற்ற வாழ்வுக்கான இரகசியம்



*நாம் இன்று கற்பது சூள கம்மவிபங்க சூத்திரமாகும். அனைவரும் தமக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எவ்வாறு நன்மைகளைச் செய்து கொள்வது என்பது தொடர்பாக இந்த*

*போதனையின் மூலம் நாம் நன்கு அறிந்து கொள்ளலாம்.*

*நாம் ஒவ்வொருவரும் பிறவிப் பயணத்தில் (சன்சாரத்தில்)ஈட்டிய கர்மங்களின் விளைவுகளினாலேயே எமது சுக துக்கங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. நாம் சுகம் கிடைக்கும் வகையிலான கர்மங்களைச் சன்சார பயணத்தின் போது செய்திருக்கா விட்டால் நாம் இந்த வாழ்விலும் பிரார்த்தனைகள் செய்து கொண்டிருக்க வேண்டியதுதான்.*

*இந்த வாழ்விலும் வெறும் பிரார்த்தனை மாத்திரம் செய்து கொண்டிருந்தால் எமது எதிர்வரும் பிறப்புகளில் கூட எவ்வித நன்மைகளும் கிடைக்காது. நாம் இந்த வாழ்வில் இயன்றளவு சுகம் கிடைப்பதற்கு காரணமாகும் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். அப்படி செய்தால்தான் அடுத்த வாழ்வில் எமக்கு சுகம் கிடைக்கும். அதற்காக எமது வாழ்வை நன்கு திட்டமிட்டுக் கொள்ளும் வழிமுறைகளைக் கூறும் ஒரு அழகிய போதனைதான் இந்த சூள கம்ம விபங்க சூத்திரமாகும்.*

*உயிர்களை கொல்வது எனும் செயல் பிறவிப் பயணத்தின் போது எமது ஆயுள் குறைவதற்கு காரணமாக அமையும். புத்த பகவான் இவ்வாறு போதித்துள்ளார். எவரேனும் ஒரு ஆணோ அல்லது பெண்ணோ உயிர்களை கொல்வதிலிருந்து தவிர்த்திருக்கின்றார். உயிர் வதையை*

*கைவிடுகிறார். ஆயுத பாவனையை தவிர்க்கிறார். அனைத்து உயிர்கள் மீதும் அன்பு, கருணை, தயவு, மற்றும் பரிவுடன் வாழ்கிறார். இந்த காரணத்தினால் அவர் மரணித்த பின்னர் சுவர்க்கத்தில் பிறப்பார். (மனிதலோகம், சுவர்க்கலோகமாகவே தர்மத்தில் குறிப்பிடப்படுகின்றது)*

*நாம் மனித உலகில் பிறப்பதற்கான காரணமாக அமைந்தது நாம் செய்த புண்ணியங்களே, அநேக காலங்கள் தேவ லோகங்களில் சுகம் அனுபவித்து அவர் எப்போதாவது மனித உலகில் பிறக்கும் போது அவருக்கு நீண்ட ஆயுள் கிடைக்கும். அவரது நீண்ட ஆயுளுக்கு காரணமாக அமைவது, அவர்*

*உயிர்களை கொல்லாததேயாகும்.*

*நோயற்ற வாழ்வின் இரகசியம்:*

*புத்த பகவான் இவ்வாறு போதித்துள்ளார். எவரேனும் ஒரு ஆணோ அல்லது பெண்ணோ உயிர்களை இம்சிப்பதிலிருந்து தவிர்த்திருப்பார். உயிர்களைத் துன்புறுத்தாமல், அடிக்காமல், ஏசாமல், ஆயுதங்களினால் துன்புறுத்தாமல் இருக்கிறார். இவ்வாறானவர் மீண்டும் மனித உலகில் பிறக்கும் போது அவருக்கு நோய்கள் ஏற்படுவது மிகக் குறைவு. அப்படியாயின் நோய்கள் குறைவான சுகாதாரமான வாழ்வை பெற வேண்டுமாயின் நாம் எமது பிறவிப்பயணத்தில் மனிதர்களுக்காக, ஏனைய விலங்குகளுக்காக நன்மைகளை செய்திருக்க வேண்டும்.*

*அழகாக இருக்க வேண்டுமானால் நாம் என்ன செய்ய வேண்டும்? கோபம் கொள்ளாமல் இருக்க வேண்டும். பகைமை கொள்ளாமல் இருக்க வேண்டும். அன்பு, கருணை, நட்பு மற்றும் பொறுமை ஆகிய குணங்களுடன் இருக்கும் ஒருவர் மரணித்து அதன் காரணமாக சுவர்க்கத்திலே பிறப்பார். அவர் மீண்டும் எப்போதாவது மனித உலகில் பிறக்கும் போது மிகவும் பொலிவான தோற்றத்துடன் பிறப்பார். அவரைப் பார்க்கும் போது மனதிற்கு விருப்பம் தோன்றும். இருமுறை பாரப்பதற்கு தோன்றும். அப்படியாயின் பார்க்கும் போதே மனம் விரும்பும் தோற்றம் பெறுவதற்கு காரணம் கோபம் கொள்ளாமையாகும்.*

***ஏழைகள்? செல்வந்தர்கள்:***

*புத்த பகவான் இவ்வாறு போதித்துள்ளார். எவராயினும் ஒரு ஆணோ அல்லது பெண்ணோ அன்னம், பானம், மலர்கள், வாசனைத் திரவியங்கள், உறையுள் எனும் இவற்றை தானமளிப்பதில்லை. தானமளிக்காதவர் பிறக்கும் எல்லா பிறப்புகளிலும் ஏழையாகத்தான் பிறப்பார். நன்றாக தனமளிப்பவர்கள் பிறக்கும் எல்லா பிறப்புகளிலும் பணக்காரர்களாக செல்வந்தவர்களாக பிறப்பார்கள். ஆகையால் ஏழையாக பிறக்கவும் பணக்காரர்களாக பிறக்கவும் கரணம் இந்த பிறவி பயணத்தில் அவரவர் செய்த தானம்தான். நீங்களும் இவ்வாறான புத்தகங்களைப் பெற்றுக் கொள்ள விரும்பினால் Tamil Buddhist*

*முகநூல் பக்கத்தில் அல்லது தொலைபேசி இலக்கம் 0712328846 மூலமாக எங்களை தொடர்பு கொள்ள முடியும்.*

**நமோ புத்தாய**

அதி வணக்கத்திற்குரிய
கிரிபத்கோட ஞானானந்த தேரர்

# சுத்தமான குடிநீருக்காக ஏங்கும் மெல்போட் தோட்டத்து மக்கள்

*கண்டி மாவட்டம், உடப்பலாத்த பிரதேச சபைக்கு உட்பட்ட புசல்லாவை மெல்போட் தோட்டம் மலையகத்தில் புகழ் பெற்ற தோட்டம் ஆகும்.*

*புசல்லாவை நகருக்கு மிக அண்மையாக இத்தோட்டம் அமைந்துள்ளது. இன்று இத்தோட்டத்தில் 300 க்கும் அதிகமான குடும்பங்கள் வாழ்கின்றன. இங்குள்ள மக்கள் தோட்டத் தொழில் துறையிலும் நகரப் பகுதிகளில் வேறு தொழில்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.*

*ஆரம்பத்தில் இத்தோட்டத்தில் சுமார் 150 குடும்பங்கள் மட்டுமே வாழ்ந்தன. இன்று இங்கு வாழும் மக்களின் தொகை இருமடங்காகியுள்ளது.*

*ஆங்கிலயர் காலத்தில் இருந்த அதே குடிநீர்த் திட்டமே இன்றும் இங்கு முன்னெடுக்கப்படுகின்றது.*

*இவர்களுக்கான குடிநீர் போதிய அளவில் கிடைப்பதில்லை. இம்மக்களுக்கென்று முறையான ஒரு நீர் வழங்கல் திட்டம் இல்லை.*

*இங்கு வழங்கப்படும் நீர் போதியதாக இல்லை. இந்த நீரும் சுத்திகரிக்கப்படுவதில்லை. சேற்று நிலத்தில் ஊற்றெடுக்கும் இடத்தில் இருந்து நேரடியாக குழாய்கள் மூலம் சிறிய நீர்த் தாங்கிகளுக்கு நீர் கொண்டு வரப்பட்டு குறிப்பிட்ட சில மணித்தியாலங்கள் மாத்திரமே விநியோகிக்கப்படுகின்றது.*

*மழைக் காலங்களில் இந்த நீரை பருக முடியாதுள்ளது. சேறும் சகதியும் கலந்த நீர்தான் குழாய்களில் வருகின்றது. வரட்சியான காலத்தில் முற்றாக நீர் விநியோகம் இல்லாது போகின்றது. கோடை காலத்தில் தோட்ட நிர்வாகம் பவுசர் மூலம் நீரை விநியோகிக்கின்றது.கோடை காலத்தில் தோட்டத்தில் காணப்படும் கிணறுகளும் வற்றிப் போகின்றன. குளிப்பதற்கு,*

*உடைகள் கழுவுவதற்கு மாத்திரமன்றி ஏனைய தேவைகளுக்கும் தண்ணீரைப் பெற்றுக் கொள்ள முடியாது இங்குள்ள மக்கள் சிரமப்படுகின்றனர்.*

*இக்காலப் பகுதியில் பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுப்புவதும் சிரமமாக உள்ளதாக பெற்றோர் கூறுகின்றனர்.*

*இம்மக்கள் தமது தொழிலையும் வருமானத்தையும் இழந்து நீரைப் பெற்றுக் கொள்வதற்காக காலத்தை செலவிட வேண்டியுள்ளது. ஏனைய தோட்டங்களில் இருந்து மக்கள் குடிபெயர்ந்து வசதியான இடங்களுக்கு செல்வதுண்டு. இங்கு அப்படியல்ல... வேறு இடங்களில் இருந்து மக்கள் இங்கு வந்து குடியேறுகின்றனர்.*

*அவ்வாறான வசதியான நகரையொட்டிய இடம் இதுவாகும். நகருக்கு மிக அண்மையாக அமைந்துள்ளதால் என்பதால் பிரபல்யமான தோட்டம் இதுவாகும்.*

*இத்தோட்டம் ஏனைய விடயங்களில் அபிவிருத்தியடைந்துள்ள*



*போதிலும் குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்படாததாகவே உள்ளது. இத்தோட்ட மக்களின் நலன் கருதி திட்டமிட்ட சிறப்பான ஒரு குடிநீர் விநியோக கட்டமைப்பு அமைக்கப்பட வேண்டும், நன்கு சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கப்பட வேண்டும்.*

*நீரை சேமிக்கக் கூடிய பெரும் கொள்ளளவு உடைய நீர்த் தாங்கிகள் அமைக்கப்பட வேண்டும் என இத்தோட்ட மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.*

படம், தகவல்:
**ஆர். நவராஜா**
(தெல்தோட்டை தினகரன் நிருபர்)

## தென்சீன கடலில் பதற்றம் அதிகரிப்பு

# அமெரிக்காவை தொடர்ந்து இந்திய போர்க் கப்பல்களும் பிரவேசம்

*தென் சீன கடல் எல்லைக்குள் இந்தியா தனது போர் கப்பல்களை அனுப்பியதாக தகவல்கள் வருகின்றன. இந்திய_ சீன எல்லையில் உள்ள லடாக்கில் பதற்றம் நிலவி வரும் நிலையில், தற்போது இது தொடர்பான தகவல்கள் வெளியாகி உள்ளன. லடாக்கில் தற்போது மீண்டும் பதற்றம் அதிகரிக்கத் தொடங்கி உள்ளது. லடாக் எல்லையில் கடந்த இரண்டு நாட்களாக சீனா அத்துமீற முயன்றுள்ளது. பாங்காங் திசோ அருகே சீனாவின் படை ஊடுருவ முயற்சி செய்துள்ளது. 29ம் திகதி மற்றும் 30ம் திகதி இரவு நேரத்தில் சீனா எல்லையில் அத்துமீற முயன்றுள்ளதாக இந்திய தரப்பு தெரிவித்துள்ளது.*



*ஆனால் இங்கே ஏற்கனவே இந்தியப் படைகள் தயார் நிலையில் இருந்தன. சீனாவின் படைகள் அத்துமீற வாய்ப்புள்ளது என்று இந்தியப் படை தயார் நிலையில் இருந்தது.*

*அவ்வேளையில் சீனாவின் படைகள் எல்லையில் அத்துமீற முயன்றுள்ளன. அப்போது சீனாவின் படைகளை தடுத்து, இந்தியப் படைகள் அவர்களை விரட்டி அடித்ததாக இந்திய தரப்பு தெரிவித்தது.*

*லடாக்கில் பதற்றம் நிலவி வரும் நிலையில் இன்னொரு பக்கம் தென்சீன கடல் எல்லையில் இதேபோல் பதற்றம் நிலவி வருகிறது. அங்கு சீனாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே முறுகல் நிலவி வருகிறது.*

*தென்சீன கடல் எல்லைப் பகுதி தனக்குத்தான் சொந்தம் என்று சீனா உரிமை கொண்டாடி வருகிறது. அங்கு இருக்கும் கடல் பகுதியில் 90% தனக்கு என்று கூறி சீனா உரிமை கொண்டாடி வருகிறது.*

*தென்சீன கடல் எல்லையில் சீனாவின் அத்துமீறலை அமெரிக்கா, வியட்நாம், மலேசியா , பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் எதிர்த்து வருகின்றன. இந்த நாடுகளுக்கு ஆதரவாகத்தான் தற்போது தென் கடல் எல்லைக்கு இந்தியா போர்க் கப்பலை அனுப்பி உள்ளது. ன்சீன கடல் எல்லை அருகே இந்திய போர்க் கப்பல் ரோந்து பணிகளை மேற்கொண்டு வருகிறது.*

*கடந்த ஜூன் மாதமே இந்தியா இங்கு போர்க் கப்பலை அனுப்பியது. சீனா_ இந்தியா இடையிலான மோதலில் இந்திய வீரர்கள் 20 பேர் மரணம் அடைந்தனர்.*

*இந்த மோதலுக்கு இரண்டு கழித்து தென்சீன கடல் எல்லைக்கு இந்தியா போர்க் கப்பல்களை அனுப்பியது. இப்போது வரை இந்திய போர்க் கப்பல்கள் அங்கு ரோந்துப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.*

*அங்கு அமெரிக்காவின் நிமிட்ஸ் மற்றும் ரொனால்ட் ரீகன் போர் கப்பல்களும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்திய போர்க் கப்பல் தென்சீன கடல் எல்லைக்கு சென்றுள்ள நிலையில் சீனா லடாக்கில் அத்துமீறி உள்ளது. இதனால் பதற்ற சூழ்நிலை நிலவி வருகிறது.*

'நாம் ஐக்கிய தேசியக் கட்சியை ஆக்கிரமிப்புச் செய்வோம்' என்கிறார் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க.

# ஐக்கிய தேசியக் கட்சியை ஆக்கிரமிப்பு செய்வோம்

## ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி பேட்டி

*திஸ்ஸ அத்தநாயக்க எமக்கு வழங்கிய பேட்டியிலேயே இக்கருத்தைத் தெரிவித்தார்.*

***கேள்வி: பொதுத் தேர்தலில் பெரும் தோல்வி அடைந்த ஐக்கிய தேசியக் கட்சி தற்போது மேலும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றது. இந்நிலைமையை நீங்கள் எவ்வாறு காண்கிறீர்கள்?***

**பதில்:** *இது உண்மையில் கவலைக்குரிய விடயமாகும்.இந்நாட்டில் பாரிய எதிர்க்கட்சியாக திகழ்ந்த ஐக்கிய தேசியக் கட்சியின் இன்றைய நிலைமை கவலைக்குரியதாகும். ரணில் விக்கிரமசிங்க கட்சிப் பொறுப்பிலிருந்து விலகி அதனை சஜித் பிரேமதாசவுக்கு வழங்கியிருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. பொதுமக்களும் தேர்தல் மூலம் அதையே தெரிவித்துள்ளார்கள். அதனைக் கருத்தில் கொள்ளாது செயல்பட்டதால் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளார்கள்.*

***கேள்வி: தற்போது நடைபெறுவது மறைமுகமான சம்பவங்கள் எனக் கூறுகின்றார்கள். அரசாங்கத்துக்கு எதிராக பாரிய இயக்கம் ஒன்றை உருவாக்கும் சூழ்ச்சி நடைபெறுகின்றதா?***

**பதில்:** *ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து செயல்பட முடியுமென்றால் நீங்கள் கூறியவாறு அரசுக்கு எதிராக பாரியசக்தி ஒன்றை உருவாக்க முடியும். ஏனென்றால் மக்களின் அதிருப்தியை அரசாங்கம் சந்தித்து வருகின்றது. நாமும் அவதானத்துடன் அரசின் நடவடிக்கைகளை கவனித்து வருகின்றோம். நாம் ஐக்கிய மக்கள் சக்தியின் பலத்தை அதிகரித்து அரசுக்கு எதிரான கட்சிகளையும் இணைத்து மக்களுக்கு எதிராக செயல்படும் அரசின் நடவடிக்கைகளை எதிர்ப்பதற்குத் தயாராகி வருகின்றோம். ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைய எதுவித தடையும் இல்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையை சஜித் பிரேமதாசவுக்கு வழங்கி இரு தரப்பாரும் ஒன்றிணைந்து செயல்படலாம்.*

***கேள்வி: ஐக்கிய தேசியக் கட்சியும், மக்கள் ஐக்கிய சக்தியும் 'ரோ' அமைப்பின் கட்டளைப்படி அரசை சங்கடத்துக்கு உள்ளாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருப்பதாக குற்றஞ்சாட்டப்படுகின்றது அல்லவா?***

**பதில்:** *நீங்கள் கூறும் இந்த விடயம் பற்றி நான் ஒன்றும் அறிய மாட்டேன். ஐக்கிய தேசியக் கட்சி எந்தவொரு அமைப்புடனும் தொடர்புடையது என நான் நம்ப மாட்டேன். இந்நாட்டில் வேறு கட்சிகள் அவ்வாறான தொடர்பை பேணியதாக கதைகள் உலா வந்தன.*

***கேள்வி: கரு ஜயசூரிய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியை எதிர்பார்த்திருந்த போதும் அது நிராகரிக்கப்பட்டுள்ள பின்னணியில், கரு ஜயசூரியவிற்கு ஐக்கிய மக்கள் சக்தி அழைப்பு விடுப்பது ஐக்கிய தேசியக் கட்சியை ஆக்கிரமிப்பு செய்யவா?***

**பதில்:** *ஆம், ஐக்கிய தேசியக் கட்சியை ஆக்கிரமிப்பு செய்து அதனை ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைப்பதே எமது எண்ணமாகும். நாம் இப்போது ஐக்கிய தேசிய கட்சியை இணைத்துக் கொள்ளவே முயற்சி செய்கின்றோம்.*

***கேள்வி: பொதுத் தேர்தலில் பெரும் தோல்வி அடைந்த ஐக்கிய தேசியக் கட்சி தற்போது மேலும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றது. இந்நிலைமையை நீங்கள் எவ்வாறு காண்கிறீர்கள்?***

**பதில்:** *உண்மையில் இது கவலைக்குரிய விடயமாகும். இந்நாட்டில் பாரிய எதிர்க் கட்சியாக திகழ்ந்த ஐக்கிய தேசியக் கட்சியின் இன்றைய நிலைமை கவலைக்குரியதாகும். ரணில் விக்கிரமசிங்க கட்சிப் பொறுப்பிலிருந்து விலகி அதனை சஜித் பிரேமதாசவுககு வழங்கியிருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. பொதுமக்களும் தேர்தல் மூலம் அதனையே தெரிவித்துள்ளார்கள். அதனைக் கருத்தில் கொள்ளாது செயல்பட்டதால் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளார்கள். பலர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்திருந்தாலும் இன்னும் சிலர் தங்களுடைய ஐக்கிய தேசியக் கட்சி மீண்டெழுந்து வரும் என்னும் நம்பிக்கையுடன் காத்திருக்கிறார்கள்.*



### 'ரணில் விக்கிரமசிங்க கட்சிப் பொறுப்பிலிருந்து விலகி அதனை சஜித் பிரேமதாசவுக்கு வழங்கியிருந்தால் இன்று இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. பொதுமக்களும் தேர்தல் மூலம் அதனையே தெரிவித்துள்ளார்கள்'

***கேள்வி: நீங்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்த போது கட்சியை மாற்றினீர்கள். அதற்கு தனிப்பட்ட விடயமே காரணமாகும்.அவ்வாறு உங்களைப் போன்ற கற்ற அனுபவம் மிக்க அரசியல்வாதிகளின் நடத்தை இளைய அரசியல்வாதிகளுக்கு பெற்றுக் கொடுக்கும் படிப்பினைகள் எவை?***

**பதில்:** *உண்மையில் அன்று ஜனாதிபதித் தேர்தலுக்கு ஐக்கிய தேசியக் கட்சியில் வெற்றி பெறக் கூடிய வேட்பாளர் ஒருவரை நியமித்தமை குறித்து மக்கள் பாராட்டுகிறார்கள். அன்று கட்சி பிளவு அடைந்திருந்த வேளையில் ரணில், சஜித் இருவரையும் ஒரே மேடைக்கு அழைத்து வர நாம் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு அவர்களை இணைத்தோம். அன்று பாதிக்கப்பட்டது கட்சியின் கொள்கை ஆகும். அதற்கு அன்று நான் கட்சியின் பொதுச்செயலாளராக எதிர்ப்பு தெரிவித்தேன். அதை விரும்பாத அடிப்படைவாத அணிகள் அன்று எனக்கு எதிர்ப்பு தெரிவித்தன. அதனாலேயே நான் அரசியல் முடிவு ஒன்றை மேற்கொண்டேன். 2015 இல் நான் கூறியவை இன்றைக்கும் பொருந்தும்.*

***கேள்வி: இதுவரை பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தி பிரதான எதிர்க் கட்சியாக சபாநாயகர் தெரிவிலும் சிம்மாசன உரையை அங்கீகரிப்பதிலும் அரசுக்கு ஆதரவை தெரிவித்துள்ளது. எதிர்காலத்திலும் இவ்வாறே செயல்படுவீர்களா?***

**பதில்:** *நாம் நாட்டுக்கு நன்மை பயக்கும் எதற்கும் எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டோம். ஜனாதிபதி பாராளுமன்றத்தில் ஆற்றிய சிம்மாசன உரையை செயல் வடிவில் காண நாம் அனைவரும் காத்திருக்கின்றோம்.சொன்னதைச் செய்யாமல் சொல்லாததை செய்து தனிப்பட்டநோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். நல்லதை செய்தால் நாம் அதற்கு ஆதரவு வழங்குவோம். தவறு செய்தால் நாம் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்போம்.*

***கேள்வி: முதலாவது பாராளுமன்ற கூட்டத்திலேயே பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் இனவாத கருத்தைக் கூறியுள்ளார். அது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு என்ன?***


**பதில்:** *நாம் ஏற்கனவே எமது நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளோம். எனது கருத்து என்னவென்றால் மீண்டும் இனவாத, மதவாத கருத்துகளைக் கூறி இந்நாட்டில் பிரச்சினையை ஏற்படுத்த நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். முப்பது வருட கால யுத்த அனுபவம் எமக்கு உண்டு. அதனால் ஏற்பட்ட வேதனை, மனக்கவலை இன்னும் நம்மை விட்டு அகலவில்லை. அவ்வாறான பின்னணியில் நாம் கூறுபவை பற்றி அவதானமாக இருக்க வேண்டும். இனவாதத்தை தூண்டக் கூடிய கூற்றுகளை தவிர்ப்பது நல்லது. நாம் எமது நிலைப்பாட்டை எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் தெரிவித்துள்ளோம்.*

***கேள்வி: சம்பிரதாய எதிர்க்கட்சிகளின் கடமைகளுக்கு பதிலாக புதிய கட்சியாக பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய மக்கள் சக்தி புதிதாக எதையாவது செய்ய எண்ணுகின்றதா?***

**பதில்:** *மக்கள் எம்மை பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக செயல்பட தெரிவு செய்து அனுப்பி இருப்பது நாட்டுக்காக பணியாற்றுவதற்காகும். அதன்படி எதிர்க் கட்சியாக அனைத்திற்கும் எதிர்ப்பு தெரிவிப்பது எமது நோக்கமல்ல. மக்களுக்கு சிறந்த பணியாற்றும் போது நாம் அதற்கு ஆதரவு வழங்குவோம்.*

*ஆனால் 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் பற்றிய விடயத்தில் நாம் அவதானத்துடன் நடந்து கொள்ள வேண்டும். 19ஆவது திருத்தத்தில் நாட்டிற்கு நன்மை பயக்கும் பல விடயங்கள் உள்ளன. அவற்றை நீக்க நாம் இடமளிக்க மாட்டோம். ஆனால் எல்லாவற்றிற்கும் எதிர்ப்பு தெரிவிப்பது என்னும் கருத்தில் இருந்து நாம் செயற்பட மாட்டோம்.*

ஜயசூரிய உடகும்புற...
(தமிழில்: வயலட்)



# புவியில் உயிரினங்களின் வாழ்வுக்கு பிளாஸ்டிக் பொருட்கள் அச்சுறுத்தல்

*பொலித்தீன் அல்லது பொலிஎதிலீன் ஆனது பொதுவாக பிளாஸ்டிக் எனலாம். உலகில் வருடாந்தம் 100 மில்லியன் தொன்களுக்கு மேலாக பொலிதீன் உற்பத்திகள் நடைபெறுகின்றன. பொலித்தீன் பாவனை உலகளாவிய ரீதியில் கணிசமான அளவு குறைந்துள்ள போதிலும், இவற்றின் பாவனையினால் மனிதனுக்கும் மிருகங்களுக்கும் சூழலுக்கும் பாரிய மறைமுகமான தாக்கங்கள் ஏற்படுகின்றன.*

*சுற்றாடல் மாசடைவதானது உலகின் மிகப் பெரிய சுகாதார அச்சுறுத்தலாக அமைகின்றது. எமது வீடுகளிலும் எம்மைச் சுற்றியுள்ள அயல் வீடுகளிலும் மற்றும் சுற்றாடல்களிலும் பலவிதமான பிளாஸ்டிக் பொருட்களைப் பாவிக்கின்றோம். உதாரணமாக பிளாஸ்டிக் போத்தல்கள், பிளாஸ்டிக் கொள்கலன்கள், நீர் விநியோக பிளாஸ்டிக் குழாய்கள், பிளாஸ்டிக் மூக்குக்கண்ணாடி வில்லைகள், தொலைபேசிகள், விளையாட்டு உபகரணங்கள், குளிசைகள் பொதி செய்யப்படும் உறைகள் போன்றவை உட்பட பல்வேறு பொருட்களிலும் பிளாஸ்டிக் காணப்படுகின்றது.*

*பிளாஸ்டிக் வகைகள் மண்ணில் புதையுண்டு கிடக்கும் போதும் எரியும் போதும் பெருமளவு நச்சுப்பொருட்கள் வெளிவிடப்படுகின்றன. இதன் கழிவுகள் மண்ணிற்கு சென்றடைவதால் நில நீரும் தாவரங்களும் மாசடைகின்றன. இம்மாசடைந்த நீரைப்பருகும் மிருகங்களும் ஏனைய உயிர்களும் கடுமையாகப் பாதிப்படைந்து இறக்கும் அபாயமும் ஏற்படுகின்றது.பொலிதீனில் இருந்து வெளியாகும் நச்சுவாயுக்களினால் இப்பிரதேசத்தைச் சுற்றியுள்ள சூழல் மாசடைவதுடன் இவ்வாயுக்களைச் சுவாசிப்பதால் இங்கு வாழும் மனிதர்களும் மிருகங்களும் சுவாச நோய்களினால் பாதிக்கப்பட நேரிடுகின்றது. மேலும் பொலித்தீன் பைகள் மிருகங்களின் வயிற்றுக்குள் செல்வதால் இவற்றின் ஜீரணத்தில் அசாதாரண நிலை ஏற்பட்டு இறக்கும் சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன. இப்பொலித்தீன் பைகள் வடிகான்கள், நீர்க்குழாய் போன்றவற்றில் அடைத்துக் கொள்வதால் நீரோட்டம் தடைப்படுகின்றது.*

*பிளாஸ்டிக் பாவனையால் மனிதர்களுக்குப் பல நோய்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக கருப்பை மற்றும் மார்புப் புற்றுநோய், இனப்பெருக்க வீதம் குறைதல், பெண் பிள்ளைகள் குறைந்த வயதில் பூப்பெய்தல், சிறுவர்களின் உடற்பருமன் அளவுக்கதிகமாக அதிகரித்தல் போன்ற பல தாக்கங்கள் ஏற்படுகின்றன.*

*பிளாஸ்டிக் மைக்றோ பீட்ஸ் ( Plastic micro beads) ஆனது செயற்கையாக உருவாக்கப்படும் பிளாஸ்டிக் துகள்கள் ஆகும். இதன் பரிமாணம் 5 மைக்ரோ மீற்றர் இலிருந்து 1 மில்லிமீற்றர் வரை ஆகும். அதாவது இதன் பரிமாணம் ஒரு குண்டூசியின் தலையை விட சிறியதாகும். சின்தடிக் பொலிமர் (Synthetic Polymers) இலிருந்து தயாரிக்கப்படும் இவை நீரில் பிரிவடையாததும் கரையாததுமாகும். வியாபார நோக்கத்திற்காக பற்பசை மற்றும் Facial scrap போன்ற அழகுசாதனப் பொருட்களில் உராய்வுத் தன்மையை ஏற்படுத்துவதற்காக இம்மைக்ரோ பீட்ஸ் துகள்கள் சேர்க்கப்படுகின்றன.*

*180 மில்லி லீற்றர் அளவுடைய முகம் கழுவும் திரவத்தில் (Facial scrap) 2.8 million micro beats இருப்பதாகவும், தயாரிப்புக்களின் Shelf life காலத்தை கூட்டுவதற்காக இம் மைக்ரோ பீட்ஸ் உற்பத்திகளில் உள்ளடக்கப்படுவதாகவும் அறியப்பட்டுள்ளது. பிரித்தானியாவில் ஒரு வருடத்தில் 80 தொன் மைக்றோ பீட்ஸ் கடலுக்குள் செல்வதாக கணக்கிடப்பட்டுள்ளது. அப்படியாயின் உலகளாவிய ரீதியில் இதன் பன்மடங்குகள் கடலில் சென்று பன்மடங்குகள் பாதிப்பை ஏற்படுத்தும் அபாயம் உண்டு. இதனால் கனடா, ஓமான், பிரான்ஸ், தாய்வான் போன்ற நாடுகளில் மைக்றோ பீட்ஸ் பாவனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.*



*இவற்றைப் பாவித்தவர்கள் முகம் மற்றும் உடம்பைக் கழுவி வெளியாகும் நீரானது வீட்டின் கழிவுக் குழாய்கள்கள், பொதுக்கழிவுக்குழாய்கள், நீரோடைகள் மூலமாக வாவிகளையும், குளங்களையும், கடலையும் சென்றடைகின்றன. இத்துகள்கள் நீரில் வாழும் மீன் மற்றும் உயிரினங்களின் கண்ணுக்கு சிறு சிறு முட்டைகள் போல் தென்படுவதால் இவற்றை ஆர்வமாக உண்கின்றன. இவை சமிபாடடையாத நிலையில் உடலில் தங்கி நிற்பதால் இம்மீன் மற்றும் நீர்வாழ் உயிரினங்களை உணவாக உண்ணும் மனிதர்களின் வயிற்றை இவை சென்றடைந்து உடலில் புற்றுநோயை உருவாக்கும் ஒரு காரணியாக அமைகின்றது.*

*மேலும் பற்பசையிலுள்ள இத்துணிக்கைகள் பல் ஈறுகளில் தங்கி தொண்டையூடாக உடலினுட் செல்கின்றன. இன்னும் கடல்நீரைத் தேக்கி கறியுப்பு உற்பத்தி செய்யப்படுவதால் இந்நீரிலுள்ள மைக்ரோ பீட்ஸ் துகள்கள் உப்பினுள் படிகின்றன. உப்பை உண்ணும் போது மனிதனின் வயிற்றை அவை சென்றடைந்து பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. பற்பசையாகப் பாவிக்கும் வேளைகளில் பல் ஈறுகளில் இத்துணிக்கைகள் படிவதனால் பக்டீறியாக்கள் பெருகி பற்சூத்தை, மற்றும் வாய் சம்பந்தப்பட்ட நோய்களும் ஏற்படுகின்றன.*

*ஒரு சில வளர்ந்த நாடுகளில் மைக்றோ பீட்ஸ் இற்குப் பதிலாக உப்பு,சீனி, பொப்பி பவுடர், அல் மார்ட் பவுடர், ஓட்ஸ் தானிய பவுடர் போன்றவற்றைப் பாவிக்கின்றனர்.*

*பொலித்தீனின் தாக்கங்கள் உலகளாவிய ரீதியில் மனிதனுக்கும், மிருகங்களுக்கும், தாவரங்களுக்கும் பாரிய அச்சுறுத்தலாக கருதப்படுகின்றன. உலகளாவிய ரீதியில் ஒரு வருடத்திற்கு ஒரு பில்லியன் பிளாஸ்டிக் பைகள் பாவிக்கப்பட்டு வீசப்படுகின்றன. அதேவேளை ஒவ்வொரு வருடமும் அமெரிக்காவில் 500 மில்லியனுக்கு மேற்பட்ட திரவம் உறிஞ்சிக் குடிக்கும் பிளாஸ்டிக் குழாய்கள்(Straws) பாவிக்கப்படுவதாக அறியப்படுகிறது. பிளாஸ்டிக் பாவனையும் கழிவகற்றுதலும் வளர்ந்துவரும் நாடுகளின் சுகாதாரத்துக்கு ஒரு பாரிய சவாலாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.*

*இலங்கையில் பிளாஸ்டிக் மற்றும் பொலிதீன் பாவனையால் மனிதர்களுக்கும் விலங்குகள் மற்றும் தாவரங்களுக்கும் ஏற்படும் பாதிப்புக்களை இயன்றளவு குறைக்கும் நோக்குடன் அரசு பல செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.*

*இலங்கை அரசு 2017.09.01ம் திகதி மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவுறுத்தலுக்கமைய LDPE இனாலான 21 அல்லது அதற்குக் கூடுதலான மைக்றோன் (Micron) பொலித்தீன் பைகள் மட்டுமே சந்தையில் விற்பனைக்காக, பாவனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளன. இவை மீள்சுழற்சி செய்யப்படக் கூடிய பொலித்தீன் ஆகும். 21 மைக்ரோன் இற்கு குறைந்த LDPE உற்பத்திகளை விற்பனை செய்தலோ அல்லது பாவனைக்கு எடுத்தலோ தண்டனைக்குரிய குற்றமாகும்.இதை மீறிச் செயற்படுபவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இச்சட்டத்தினை அமுல்படுத்தும் அதிகாரம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் பாதுகாப்பு அலுவலர்களுக்கும், நுகர்வோர் அதிகார சபையினால் 2009.02.11ம் திகதி வெளியிடப்பட்ட அதிவிஷேட வர்த்தமானியின் படி நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.*

*மேலும், மத்திய சுற்றாடல் அதிகார சபை மாவட்ட, பிரதேச மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் குழுக்களை அமைத்து தேவையற்ற பொலித்தீன் பாவனைகளை இயன்றளவு குறைப்பது மட்டுமல்லாது சுற்றுச் சூழலில் மற்றும் கடற்கரை ஓரங்களில் கழிவுகளாக அடைந்து கிடக்கும் தேவையற்ற பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் வகைகளை கடலோர பாதுகாப்பு அதிகார சபையுன் இணைந்து சமூகத் தொண்டர்களின் மூலம் சிரமதான அடிப்படையில் ஒன்று சேர்த்து இவற்றை பாதுகாப்பாக உரிய முறைப்படி அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. அது மட்டுமல்லாமல் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனையினால் மனித மற்றும் மிருகங்களுக்கும் சுற்றாடலுக்கும் ஏற்படும் தீங்குகள் பற்றி பரந்தளவிலான அறிவுரைக் கருத்தரங்குகளை படித்தோருக்கும் பாமர மக்களுக்கும் நடத்தி வருகின்றது.*

எஸ். தஸ்தகீர் ...
கல்முனை குறூப் நிருபர்

# முள்ளிவாய்க்காலில் புயல் காற்று, ஐஸ் மழை; 15 வீடுகள் சேதம்







முள்ளிவாய்க்கால் மேற்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை மழையுடன் கூடிய புயல் காற்று வீசியுள்ளதுடன் ஐஸ் கட்டிகளும் கொட்டியுள்ளதாக மக்கள் தெரிவித்தனர். இதனால் 15 வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் முள்ளிவாய்க்கால் மேற்கில் தற்காலிக வீடு ஒன்று முற்றாக காற்றில் தூக்கி எறியப்பட்டுள்ளது.

ஏனைய வீடுகளின் கூரைகள் காற்றினால் தூக்கி வீசப்பட்டுள்ளதுடன் மரங்களும் முறிந்து வீழ்ந்துள்ளன.

ஐஸ் மழைபெய்ததால் வீடுகளின் கூரைகள் பல சேதமடைந்துள்ளன. ஓடுகளிலும் சீற்களிலும் தகரங்களிலும் பாரிய சத்தத்துடன் ஐஸ்கட்டிகள் வீழ்ந்துள்ளதால் கூரைகளுக்கு சிறு சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

மரக்கிளைகள் முறித்து வீசப்பட்டுள்ளதுடன் சுழற்சி காற்றின் வேகத்தினால் வேலிகளும் சாய்ந்துள்ளன.

முள்ளிவாய்க்கால் பகுதியிலுள்ள படையினரின் முகாம் வேலியிலுள்ள அடைக்கப்பட்ட தகரங்கள் காற்றினால் பிடுங்கி வீசப்பட்டுள்ளன.

சேத விபரங்கள் தொடர்பில் அறிய சம்பவ இடத்திற்கு சென்ற முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினர் விபரங்களை திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

## பொது அமைப்புகளின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடல்

பொது அமைப்புகள் எதிர்நோக்குகின்ற பிரதேச ரீதியான முக்கியமான பிரச்சினைகளை கண்டறியும் விசேட கலந்துரையாடல் கூட்டமொன்று நேற்று முன்தினம் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவர் காதர் மஸ்தான் தலைமையில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட மடு, மாந்தை மேற்கு, நானாட்டான் மற்றும் முசலி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்டு இயங்கிவரும் பொது அமைப்புகள் எதிர்நோக்குகின்ற பிரதேச ரீதியான பிரச்சினைகளே கலந்துரையாடப்பட்டன. இக் கலந்துரையாடலில் பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட பொது அமைப்புக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை பாராளுமன்ற உறுப்பினர் கேட்டறிந்துக் கொண்டார்.

இந்நிகழ்வில் மாந்தை மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களான திருமதி ரமீஸா, திருமதி தவமலர், பாராளுமன்ற உறுப்பினர்களின் இணைப்பாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கணவனால் தீ மூட்டப்பட்ட பெண் வைத்திசாலையில் மரணம்

நாகர்கோவில் நிருபர்

கணவனால் தீ மூட்டப்பட்டதாக தெரிவித்து வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட இளம் குடும்பப் பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அல்வாய் வடக்கு பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சிவகுமார் தூபிகா (வயது 22) என்பவரே உயிரிழந்தவராவார்.

திருமணமாகி சில வாரங்களேயான மேற்படி இளம் குடும்பப் பெண்ணுக்கு அவரது கணவனால் தீ மூட்டப்பட்டதாக தெரிவித்து எரியுண்ட நிலையில் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை அவர் உயிரிழந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பருத்தித்துறை பொலிசார் உயிரிழந்த பெண்ணின் கணவரை கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியா நகர் முழுவதும் பொலிஸார் திடீர் சோதனை





வவுனியா விசேட நிருபர்

வவுனியா நகர் முழுவதும் மோப்ப நாயின் உதவியுடன் வவுனியா பொலிஸார் நேற்றுக் காலை சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

போதைப்பொருள் அற்ற வவுனியாவை உருவாக்குவோம் எனும் எண்ணக்கருவில் வவுனியா பொலிஸாரினால் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது. சிறைச்சாலை சுற்றுவட்ட சூழல், வவுனியா நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள், பொதுமலசல கூடங்கள், சந்தைகள், களஞ்சியசாலைகள் போன்றவற்றை மோப்ப நாயின் உதவியுடன் பொலிஸார் சோதனை செய்தனர்.

இந் நடவடிக்கையில் 20க்கு மேற்பட்ட பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்ததுடன் சந்தேகத்திடமான நபர்கள் மற்றும் வெளி மாவட்டங்களை சேர்ந்தவர்களின் விபரங்களையும் பொலிஸார் சேகரித்தனர்.

பொலிஸாரின் இவ் நடவடிக்கைக்கு பொது மக்கள் ஒத்துழைப்புக்களை வழங்கியிருந்தமையுடன் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையினை முன்னெடுக்கும் வவுனியா பொலிஸாரின் நடவடிக்கைக்கு பாராட்டுக்களையும் தெரிவித்திருந்தனர்.

# தீப்பற்றி எரிந்த முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள்

பண்டாரிக்குளத்தில் சம்பவம்





வவுனியா விசேட நிருபர்

வவுனியா பண்டாரிக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாடசாமி ஆயலயத்திற்கு அருகே அமைந்துள்ள வீடொன்றில் முச்சக்கரவண்டியும், மோட்டார் சைக்கிளும் தீப்பற்றி எரிந்து முற்றாக சேதமடைந்துள்ளது.

நேற்று அதிகாலை 3.00 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த வீட்டில் இருந்த அனைவரும் உறங்கிய சமயத்தில் காலை 3.00 மணியளவில் வீட்டு முற்றத்தில் நிறுத்தப்பட்டிருந்த முச்சக்கரவண்டியும் மோட்டார் சைக்கிளும் திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

வாகனங்கள் தீப்பற்றியதை அவதானித்த வீட்டார் உடனடியாக தண்ணீரை ஊற்றி அணைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். எனினும் முச்சக்கரவண்டி முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதுடன் மோட்டார் சைக்கிள் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா பொலிஸார் தீ விபத்திற்கான காரணம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## புங்குடுதீவில் இராணுவத்தினர் கட்டிய வீடு பயனாளிகளிடம் கையளிப்பு





போரினால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட வீடு யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியினால் நேற்று வீட்டு உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டது

வன்னியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு புங்குடுதீவு 4ம் வட்டாரம் ஜே27கிராம சேவகர் பிரிவில் சிறிய குடிசை வீடு ஒன்றில் வசித்து வந்த தவராசா கவிதாவின் குடும்பத்தினருக்கு தியாகி அறக்கொடை நிறுவன இயக்குனரின் 15 இலட்சம் ரூபா நிதிப் பங்களிப்பில் இராணுவத்தினரால் கட்டப்பட்ட வீடு நேற்று யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் செனவிரத்னவினால் வீட்டு உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டது.

நிகழ்வில் தியாகி அறக்கொடை நிதிய இயக்குனர் இராணுவ உயரதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர் இந்த வீடு இரண்டு மாதங்களும் 9 நாட்களுக்குள் இராணுவத்தினரால் மிக வேகமாக கட்டி முடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வைத்தியர் பற்றாக்குறை; பொது மக்கள் ஆர்ப்பாட்டம்





வவுனியா நிருபர்

வவுனியா செட்டிக்குளம் ஆதார வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு கோரி அப்பகுதி மக்களால் நேற்று ஆர்ப்பாட்டம் செய்யப்பட்டது.

செட்டிக்குளம் ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக காலை 8.30 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின் போது கருத்து தெரிவித்த பொதுமக்கள்,

செட்டிகுளம் வைத்தியசாலையில் பல நிர்வாக குறைபாடுகள் காணப்படுகின்றது. குறிப்பாக வைத்தியர் பற்றாக்குறை காரணமாக நோயாளார் விடுதி மூடப்பட்டுள்ளதுடன், சிறிய நோய்களிற்காக சிகிச்சைக்கு சென்றாலும் வவுனியா பொது வைத்தியசாலைக்கு மாற்றப்படும் நிலையே காணப்படுகின்றது. இதனால் நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களிற்கு உள்ளாகின்றனர். கூலி தொழிலை வாழ்வாதாரமாக கொண்டுள்ள இப்பகுதி மக்கள் வவுனியா சென்று வருவதற்கு பொருளாதார ரீதியாக கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

இங்கு கடமையாற்றும் மருத்துவ அத்தியட்சகர் வைத்தியசாலையின் அம்பியூலன்ஸ் வண்டியை தனது தனிப்பட்ட பாவனைக்காக பயன்படுத்தி வருகின்றார். வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் சிலர் அவரது காணியில் வேலை செய்து வருகின்றனர். எனவே மருத்துவ அத்தியட்சகரையும் மாற்றி வேறு ஒருவரை நியமித்து தரவேண்டும் என்று தெரிவித்தனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பொறுமையிழந்த நிலையில் வைத்தியசாலைக்குள் செல்ல முற்பட்டனர். இதன்போது பொலிசாரால் வைத்தியசாலை பிரதான வாயில் மூடப்பட்டது. இதனால் நீண்ட நேரமாக வாயிலை மறித்தபடி பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## வவுனியாவில் சர்ச்சையை கிளப்பும் விடயங்களுக்கு உரிய நடவடிக்கை

திலீபன் எம்.பி

வவுனியா நிருபர்

வவுனியாவில் சர்ச்சையை கிளப்பியுள்ள இரு வேறு விடயங்கள் தொடர்பில் பல தரப்பாலும் தனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பில் தீர்க்கமான நடவடிக்கை எடுக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்பு குழு தலைவருமான கு. திலீபன் தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக அவர் நேற்றுக் கருத்து தெரிவிக்கையில்,

வவுனியாவில் அண்மையில் பண்டாரவன்னியன் சிலைக்கு படிக்கட்டுகள் நகரசபையால் கட்டப்பட்டமை மற்றும் வவுனியா குளத்தில் பூங்கா அமைக்கப்பட்டமை தொடர்பில் சர்ச்சை நிலை ஏற்பட்டுள்ளது.

இவ் இரு விடயங்களைப் பற்றியும் பலர் எனது கவனத்திற்கு தனிப்பட்ட முறையிலும் அமைப்புக்கள் ரீதியில் தெரியப்படுத்தியுள்ளனர்.

வவுனியாவில் முக்கிய அமைப்புக்கள் மற்றும் முக்கியஸ்தர்களால் குறித்த இரு விடயங்களும் தவறானவை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே இந்த விடயங்களில் நான் அதிக அக்கறை செலுத்தி தீர்க்கமான முடிவு எடுக்கப்படும்.

# வவுனியா மக்களுக்கு பொலிஸார் விடுத்துள்ள முக்கிய அறிவிப்பு

வவுனியா விசேட நிருபர்

கொவிட் 19 தொற்றுள்ள நாட்டிலிருந்து கடல் மார்க்கமாக அனுமதியின்றி எமது நாட்டிற்குள் நபர்கள் உட்பிரவேசித்தலை தடுப்பதற்கு உதவுமாறு பொலிஸாரினால் வவுனியாவில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

காய்ச்சல், வரட்டு இருமல், சளி, மூச்சு திணறல் இருக்கும் நபர்களுக்கு கொரோனா தொற்றாக இருக்கலாம். எனவே, அவர்களிடமிருந்து அவதானமாக இருங்கள். சந்தேகத்திற்கிடமான நபர்களை தங்கவைத்தல், பாதுகாப்பளித்தல், போக்குவரத்திற்காக உதவியளித்தல், மறைந்திருப்பதற்காக உதவி புரிதல் செய்யலாகாது. எனவே, மேற்குறித்த விடயங்கள் தொடர்பாக தகவல் கிடைத்தால் அல்லது அறிய கிடைத்தால் இல்லாவிடில் காணக்கிடைத்தால் உடனடியாக பொலிஸாருக்கு தெரிவித்தல் வேண்டும்.

199 அல்லது 1933 அல்லது 011 2444480 அல்லது 011 2444481 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்துமாறும் அல்லது 071 8558875 என்ற வட்சப் நம்பருக்கு அழைப்பினை மேற்கொள்ளுமாறு பொலிஸாரினால் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சுவரொட்டிகள் வவுனியா நகர், புதிய பேருந்து நிலையம் போன்ற இடங்களில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.



# சுபீட்சத்தின்பால் நாட்டை கட்டியெழுப்ப ஜனாதிபதி வேகமாக செயல்படுகிறார்

## மட்டு. மாவட்ட அபிவிருத்தி கூட்டத்தில் ராஜாங்க அமைச்சர்

*(மட்டக்களப்பு சுழற்சி நிருபர்)*





மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி தொடர்பான விசேட கூட்டம் நேற்று (31) மாவட்ட செயலகத்தில் தபால் சேவைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை தொழில் அபிவிருத்தி ராஜாங்க அமைச்சரும் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.வியாழேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இங்கு கருத்து தெரிவித்த ராஜாங்க அமைச்சர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச சுபீட்சத்தின்பால் நாட்டை கட்டியெழுப்ப வேகமாகவும் விவேகமாகவும் செயல்பட்டு வருகின்றார். கொவிட் 19 வைரஸ் தாக்கம் வல்லரசு நாடுகளுக்கு இதுபெரும் சவாலாக இருந்த போதி லும் மிக இலகுவாக இதில் ஜனாதிபதி வெற்றிகண்டார் . எனவே பலம் பொருந்திய இன்றைய அரசின் மூலம் நாம் எமது மாவட்டத்தின் தேவைகளை நிறைவு செய்ய வேண்டியுள்ளது. ஏனைய மாவட்டங்களைவிட ஒருபடி முன்னேறி எமது மாவட்ட மக்களுக்கு பணியாற்ற வேண்டியுள்ளது. இதற்கு இம் மாவட்ட அரசசேவை அதிகாரிகள் பூரண ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும் .

பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ அன்று ஜனா திபதியாக ஆட்சி செய்கையில் இந்த நாட்டில் பெருமளவு வீதிகள், பாலங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. அந்த வகையில் தற்போது மூன்று மாதத்துக்கான தற்காலிக வரவுசெலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது, இதனூடாக நாம் எமது மாவட்டத்தில் பல அபிவிருத்திகளை செய்துகொள்ள வாய்ப்புக் கிட்டுமென தெரிவித்தார்.

இந் நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா, மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த், திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணிய மூர்த்தி, காணிப்பிரிவு மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நவ ரூபரஞ்சனி முகுந்தன் உட்பட பிரதேச செயலாளர்கள், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள் பலரும் பிரசன்னமாகி இருந்தனர்.



தம்பலகாமம் தெழுங்கு நகர் பிரதேசத்திற்கான ரயில்வே கடவையொன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகளை பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் மேற்கொண்டுள்ள நிலையில், அதன் அமைவிடம் தொடர்பான இடங்களை பார்வையிட்ட போது.

(படம்; கந்தளாய் தினகரன் நிருபர்)

## சேவை நலன் பாராட்டு விழா

*(அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)*

அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பு லீடர் அஷ்ரஃப் கனிஷ்ட கல்லூரியில் சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற அதிபர் மற்றும் ஆசிரியர்களின் சேவையினைப் பாராட்டி பாடசாலைச் சமூகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட சேவை நலன் பாராட்டு விழாவும் பாடசாலைக்கு தளபாடங்களை அன்பளிப்புச் செய்யும் நிகழ்வும் அக்கரைப்பற்று பாயிஷா மகா வித்தியாலய கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

லீடர் அஷ்ரஃப் கனிஷ்ட கல்லூரியின் முன்னாள் அதிபர் ஏ.எம். நபீல் மற்றும் இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியைகளான எஸ். ஹசானா பர்வின், ஏ.டபள்யு.நதீகா பானு, எம்.ஐ.றியாஸா பர்வின் ஆகியோரின் சேவையினைப் பாராட்டி, நினைவுச் சின்னங்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன் இவர்கள் பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டனர்.

அத்தோடு, பாடசாலை அபிவிருத்திக் குழுவின் செயலாளர் எஸ்.லாபீர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

கல்லூரியின் காரியாலயத்திற்கு தேவையாகக் காணப்பட்டு வந்த அலுவலக தளபாடங்களின் ஒரு தொகுதியினை பாடசாலை அபிவிருத்திக் குழுவின் செயலாளர் எஸ். லாபீர் அன்பளிப்பாக பாடசாலை நிருவாகத்தினரிடம் கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆற்று மணல் ஏற்றிய மூவர் கைது

*அக்கரைப்பற்று மேற்கு தினகரன் நிருபர்*

அக்கரைப்பற்று ஆலிம் நகர் நீத்தை, சிறு நீத்தை வயல் பிரதேசத்தை அண்டிய வாய்க்கால்களில் சட்ட விரோதமாக ஆற்று மணல் ஏற்றிய மூவரை அக்கரைப்பற்று பொலிசார் கடந்த ஞாயிற்றுக்கிழமை (30) கைது செய்தனர்.

பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பொலிசார் நடத்திய சுற்றிவளைப்பின் போது உழவு இயந்திரத்தின் இழுவைப்பெட்டியில் ஆற்று மணல் ஏற்றி அக்கரைப்பற்று நோக்கி புறப்பட்ட போதே பொலிசார் கைது செய்தனர்.

மணல் ஏற்றிய உழவு இயந்திரங்களை கைப்பற்றியதுடன் மூவரையும் கைது செய்து அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

# மட்டக்களப்பு பள்ளிவாசல்கள் நிருவாகிகளுக்கான செயலமர்வு





*(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)*

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பள்ளிவாசல்களின் நிருவாகிகளுக்கான செயலமர்வொன்று காத்தான்குடியில் நேற்றுமுன்தினம் (30) நடைபெற்றது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் காத்தான்குடி முதலாம் குறிச்சி மீரா பெரிய ஜும்ஆப் பள்ளிவாசல் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஏ.பி.எம்.அஷ்ரப், உதவிப் பணிப்பாளர் எம்.எல்.எம்.அன்வர் அலி, கிழக்கு மாகாண பிராந்திய அலுவலக பொறுப்பதிகாரி எம். ஜுனைட் மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பள்ளிவாசல்களின் நிருவாகிகள் கலந்து கொண்டனர்.

இதன் போது பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்களின் நிருவாக நடவடிக்கைகள் மற்றும் நிதி நடவடிக்கைகள் தொடர்பாகவும் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

இதன் போது காத்தான்குடி முதலாம் குறிச்சி பள்ளிவாசல் நிருவாகத்தின் சார்பில் அதன் தலைவர் மௌலவி எம்.ஐ.ஆதம்லெவ்வை பலாஹி , முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஏ.பி.எம்.அஷ்ரப் நினைவுச் சின்னம் வழங்கி பணிப்பாளரை கௌரவித்தார்.

## சேனை பயிர்ச் செய்கைக்கு வன இலாகா அதிகாரிகள் மறுப்பு

*(றொட்டவெவ குறூப் நிருபர்)*

திருகோணமலை றொட்டவெவ மற்றும் அத்தாபெந்திவெவ பகுதிகளில் சேனைப் பயிர்ச்செய்கை செய்வதற்கு பிரதேச செயலாளர் அனுமதி வழங்கியும், வன இலாகா அதிகாரிகள் மறுப்பு தெரிவித்து வருவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த யுத்த காலம் தொடக்கம் இன்று வரைக்கும் சேனைப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டு தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வருவதாகவும், தற்போது வன இலாகா அதிகாரிகள் தங்களுக்கு சொந்தமான காணிகள் எனக்கூறி சேனைப் பயிர்ச்செய்கையை முன்னெடுக்க வேண்டாமென தெரிவிக்கின்றனர்.

இதேவேளை வருடா வருடம் சேனைப் பயிர்ச் செய்கை மேற்கொண்டு வரும் பயிர்ச் செய்கையாளர்களுக்கு எதிராக வன இலாகா அதிகாரிகள் வழக்குகள் பதிவு செய்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

சேனைப் பயிர்ச்செய்கையாளர்களின் நலன் கருதி அரசியல்வாதிகளும் அரசாங்க உத்தியோகத்தர்களும் சாதகமான ஒரு பதிலை தர வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுகின்றனர்.

இதுதொடர்பாக மொரவெவ பிரதேச செயலாளர் பாத்திய விஜயந்தவிடம் கேட்டபோது, பல வருடங்களாக அப்பகுதியில் சேனைப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அக்காணி வன பரிபாலன திணைக்களத்திற்கு சொந்தமான காணி என உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

## குரங்கு தொல்லை

*( தோப்பூர் தினகரன் நிருபர் )*

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தோப்பூரில் குரங்குகளின் தொல்லை காணப்படுவதாக பொதுமக்கள் கூறுகின்றனர்.

குரங்குகள் வீட்டுக்கூரைகளை சேதப்படுத்துவதாகவும் பயிர்களை நாசமாக்குவதாகவும் கூறுகின்றனர். இதனை கட்டுப்படுத்த உரிய பகுதியினர் கவனம் செலுத்தவேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## சேதன பசளை தொழிற்சாலை அமைக்குமாறு கோரிக்கை

*(மூதூர் தினகரன் நிருபர்)*

மூதூர் பிரதேச தோட்டச் செய்கையாளர்களின் நலன்கருதி சேதனப் பசளை உற்பத்தி தொழிற்சாலை ஒன்றை அமைத்துத்தருமாறு தோட்டச் செய்கையாளர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மூதூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட மற்றும் பிரதேச சபைக்கு உட்பட்ட பெரும் பகுதிகளில் பெருமளவிலான திண்மக் கழிவுகள் சேகரிக்கப்படுகின்றன.

இந்நிலையில் மரக்கறிப் பயிர்கள் பெருமளவில் மூதூர் பிரதேசத்தில் பயிரிடப்படுவதால் சேதனப் பசளைகளை மிகக் குறைந்த விலையில் தோட்டச் செய்கையாளர்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

## ஊடகவியலாளர்களுக்கான ஒரு நாள் செயலமர்வு

*அம்பாறை சுழற்சி,ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்கள்*



அனர்தங்களின் போது செய்திகளை வெளியிடுவது தொடர்பான ஒருநாள் செயலமர்வு அக்கரைப்பற்று பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் சனிக்கிழமை(29)நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இச் செயலமர்வில், அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம். றியாஸ் தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில், தென்கிழக்குப் பல்கலைக் கழக பேராசிரியர் றமீஸ் அப்துல்லா பிரதம வளவாளராகக் கலந்து கொண்டு விளக்கமளித்தார்.

இந்நிகழ்வில், கல்முனை பிராந்திய தொற்று நோய்தடுப்புக்கான பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் நாகூர் ஆரிப் மற்றும் அக்கரைப்பற்று பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பறூஸா நக்பர், அக்கரைப்பற்று பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் றொசின் தாஜ் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

அனர்த்தங்களின் போது ஊடகவியலாளர்கள் பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு ஒழுங்கு முறைகள், சுகாதார நடைமுறைகள், அனர்த்தம் தொடர்பிலான உண்மைச் செய்திகளை எவ்வாறு வெளியிடுதல், மக்களை வீண் பீதிக்குட்படுத்தாதவாறு அவதானத்துடன் உரிய இடத்திற்குச் சென்று தகவல் சேகரிப்பது தொடர்பிலும் துறைசார் வளவாளர்களினால் விளக்கமளிக்கப்பட்டன.

# அக்கரைப்பற்றில் உப-உணவு அறுவடையும் விவசாயிகளுக்கு உபகரணங்கள் வழங்கலும்





*(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)*

அம்பாறை மாவட்டத்தில் உப உணவுப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் செய்கை பண்ணப்பட்ட பயிர்களின் அறுவடை, பிரதேச ரீதியாக ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ், அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள, ஆலிம்நகர் விவசாய விரிவாக்கல் பிரிவில் செய்கைபண்ணப்பட்ட நிலக்கடலை மற்றும் பாசிப்பயறு என்பனவற்றின் அறுவடை விழா அண்மையில் இடம்பெற்றது.

இவ்வறுவடை விழாவில் அம்பாறை மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் எம்.எப்.ஏ.சனீர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அறுவடையை ஆரம்பம் செய்து வைத்தார்.

இதன்போது, சிறந்த முறையில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு பாதுகாப்பு உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில், அக்கரைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர் எம்.ஏ.றாசீக் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டதுடன், பாடவிதான உத்தியோகத்தர் எம்.ஐ. சியாத், விவசாய வியாபார ஆலோசனைப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் ஜெமீல், விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர், விவசாயப் போதனாசிரியர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.







மட்டக்களப்பு கல்லடி டச்பார் புனித இஞ்ஞாசியார் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 30 ஆம் திகதி காலை மட்டக்களப்பு மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி ஏ.தேவதாசன் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. திருவிழா கூட்டுத் திருப்பலியினை அருட்தந்தை வின்சன்ட் ரொசைரோ, அருட்தந்தை லோரன்ஸ் லோகநாதன் ஆகியோர் இணைந்து ஒப்புக்கொடுத்தனர். அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள், துறவிகள், பொது நிலையினரென பெருமளவானோர் கலந்துகொண்ட திருவிழாவானது புனிதரின் திருச் சுருப ஆசீரைத் தொடர்ந்து நிறைவுபெற்றது. படங்கள்;கல்லடி குறூப் நிருபர் மட்டக்களப்பு கல்லடி டச்பா

## நோன்மதி தின... 03ஆம் பக்க தொடர்...

ஆட்சியமைத்தது.அதன் பின்னர் மீளவும் பிரதமராக பதவியேற்ற மகிந்த ராஜபக்ஸ அவர்களின் நேரடி நிர்வாகத்தின் கீழ்,புத்த சாசன அமைச்சு வந்துள்ளமை சிறப்பம்சமாகும்.ஒரு மதம் பற்றி ஏனைய சமூகங்களுக்கு அந்த சமூகங்களின் மொழிகளில் இலகு நடையில் வழங்கும்போது நல்லிணக்கம் ஏற்படுகிறது.மேலும் மதங்கள் பற்றிய பல அனாவசிய சந்தேகங்களும் முரண்பாடுகளும் நீங்குகின்றன.

நோன்மதி தினத்தின் வரலாற்று சிறப்பு, பௌத்த தர்மம், பஞ்ச சீலம் தொடர்பான விளக்கம், தியானம் மற்றும் தானங்கள் பற்றிய விளக்கம், புத்த பகவானின் வாழ்கை சரித்திரம் உட்பட பல விடயங்கள் உள்ளடங்குகின்றன. இந்த நிகழ்ச்சியில் தமிழ் பேசும் பௌத்த பிக்கு மூலம் பௌத்த தர்மம் குறித்த விளக்கம் இலகு தமிழில் வழங்கப்படுகின்றமை சிறப்பம்சமாகும். புத்த சாசன , கலாசார அலுவல்கள் மற்றும் மத விவகார அமைச்சின் ஊடக செயலாளரும் சிரேஸ்ட ஊடகவியலாளருமான ஜெயரஞ்ஜன் யோகராஜ் அமைச்சின் சார்பில் கலந்துகொள்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் கடந்த ஆகஸ்ட் 3ம் திகதி நிக்கினி நோன்மதி தினத்தன்றும் விசேட ஒளிபரப்பு இடம்பெற்றது.எசல நோன்மதி தினம் பற்றிய அறிமுகம், அதன் சிறப்பு,பௌத்த தர்மம் , புத்த பகவானின் போதனைகள் மற்றும் வரலாறு தொடர்பில் சிறந்த விளக்கங்களை இரத்மலானை விமலா ராமயவைச் சேர்ந்த சங்கைக்குரிய திருநெல்வேலி போதி தர்மர் அரவணடிகள்; வழங்கினார் என்பதும் சிறப்பம்சமாகும். அத்துடன் இலங்கை தமிழ் பௌத்தன் சங்கத்தின் தலைவர் பத்மராஜா மற்றும் அதன் செயலாளர் திருமதி ராதிகாவும்; கலந்து, பஞ்ச சீலம் ,பௌத்த தர்மம் போன்ற விடயங்கள் குறித்த விளக்கங்களை வழங்கினர்.இந்த நிகழ்ச்சியை தொகுத்தளித்தவர் சந்திரசேகர். இன்றைய தினம் காலை 9 மணி முதல் 11.30 வரை ஒரு பகுதி கலந்துரையாடலும் , பௌத்த பிக்கு உடனான விசேட உரையாடல் இரவு 7.30இற்கும் இடம் பெற உள்ளது.

## சு.க 69 வருட நிறைவை... 03ஆம் பக்க தொடர்...

நடைபெறவுள்ளது. கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர் என்று கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர் எம். பௌஸான் அன்வர் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் முஸ்லிம் பிரிவு ஏற்பாடு செய்துள்ள இவ்விஷேட நிகழ்வில் கட்சியின் ஸ்தாபகர்களான மறைந்த எஸ்.டப்ளியூ. ஆர்.டி பண்டாரநாயக்க, டி.ஏ.ராஜபக்ஷ, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மற்றும் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத், பேர்னாட் அலுவிகார, ஐ.ஏ. காதர், கடுகண்ணாவ மரிக்கார் (சிங்கள மரிக்கார்), கலகெதர ஜப்பார், ஹலீம் இஷாக், அலவி மௌலானா உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் நினைவு கூரப்பட விருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## மஞ்சள் விற்பனை தொடர்பில்... 03ஆம் பக்க தொடர்...

தெரிவித்த அவர், குறித்த மாதிரிகளில் 13 வகை மஞ்சள் தூள்களில் சில பொருட்கள் கலக்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

நாடு பூராகவும் உள்ள மாவட்ட பிரதிநிதிகளுக்கு இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## அமெரிக்க நிதி உதவியில்...

உள்ளடங்குகின்றன. அமெரிக்க இந்தோ பசுபிக் கட்டளையகத்தின் (U.S. IndoPacific Command) முன்னெடுப்பு ஒன்றான இந்த திட்டத்தில் அமெரிக்காவும் இலங்கை கல்வி அமைச்சும் 93 மில்லியன் ரூபாவை (ஏறக்குறைய 5 இலட்சம் அமெரிக்க டொலர்கள்) முதலீடு செய்துள்ளன.

புதிய கோட்பாடுகள் மற்றும் சிந்தனைகளை ஆராய்ந்தறிவதற்கு மாணவர்களுக்கு பாதுகாப்பான சூழல் ஒன்றை இந்த புதிய கட்டிடம் வழங்கும் அதேநேரம், அவர்களுக்கும் அவர்களது சமூகத்துக்குமான எதிர்காலம் ஒன்றையும் நிர்மாணிக்கிறது, என்று தூதுவர் டெப்லிட்ஸ் இந்த நிகழ்வில் தெரிவித்தார்.

பிள்ளைகளின் கல்வியில் அவர்களை ஆதரிக்கும் மற்றும் வலுவூட்டும் சிறப்புரிமையையும் பொறுப்பையும் அனைத்து பெரியவர்களும் பகிர்ந்து கொள்கின்றனர், என்றும் அவர் குறிப்பிட்டார்.

மிகவும் அவசியமாக இருந்த வகுப்பறை வசதிகளை வழங்குவதற்கு மேலதிகமாக, உள்ளூரில் இருப்பிடங்களை இழந்த 400 பேர் வரையானோருக்கான அவசரகால தங்குமிடமாக செயற்படக்கூடிய வகையிலும் இந்த கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, இந்த பிராந்தியம் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படக் கூடியது என்ற வகையில் இது பயனுள்ளதாக அமைந்துள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யாஹம்பத், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜி. முத்துபண்டா, மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ. இஷாம், வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம். காசிம், மற்றும் பிரதேச செயலளர் எம்.பி.எம். முபாரக் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## கல்வி, கைத்தொழில்துறை... 03ஆம் பக்க தொடர்...

அரசிடமிருந்து இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கும் ஒத்துழைப்பு தொடர்பில் இதன்போது அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெளிவுபடுத்தியுள்ளார். ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் உத்தேச திட்டமான கைத்தொழில் மற்றும் முதலீட்டு வலயங்களில் மருந்து உற்பத்தி மற்றும் டயர் தொழிற்சாலை உள்ளிட்ட அபிவிருத்தி செயற்றிட்டம் தொடர்பிலும் அதற்கான மனித வள விருத்தியை மேம்படுத்துவது தொடர்பிலும் இங்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அபிவிருத்தி வேலைத் திட்டங்களை துரிதமாக முன்னெடுத்துச் செல்வதற்காக நிர்மாணத்துறை மற்றும் வளங்கள் துறையின் திறன பிவிருத்தி அவசியம் தொடர்பில் அமைச்சர் இங்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

அது தொடர்பில் இருவருக்கிடையில் இணக்கம் ஏற்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் சில மாதங்களில் அது தொடர்பான துரித நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்குமிடையிலான புரிந்துணர்வு மற்றும் ஒத்துழைப்புகளை பலப்படுத்துவது தொடர்பில் செயற்படுவதற்கு தாம் விருப்பமாக உள்ளதாக சீனத் தூதுவர் இதன்போது தெரிவித்துள்ளார். அதன் அடுத்தகட்ட நடவடிக்கையான வீடியோ கலந்துரையாடல் மூலம் மேலும் விடயங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இரு நாடுகளுக்குமிடையிலான ஒத்துழைப்புகளை வலுப்படுத்தும் வகையில் இரு தரப்பு அதிகாரிகளுக்கிடையில் இணைப்புகளை ஏற்படுத்துவது தொடர்பிலும் இங்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.(ஸ)

## 20வது அரசியலமைப்புத்... 03ஆம் பக்க தொடர்...

முன்வைக்கப்பட்டுள்ளது. புதிய அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் யோசனைகளை அமைச்சரவைக்குப் பரிந்துரைப்பதற்காக முக்கிய அமைச்சர்கள் சிலரைக்கொண்ட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மத்தல் ராஜபக்ச விமான... 03ஆம் பக்க தொடர்...

நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். தற்பொழுதுள்ள அரசியல் யாப்பு மாற்றியமைக்கப்பட்டு புதியதோர் அரசியல் யாப்பே நாட்டிற்கு தேவையாகவுள்ளது. இதற்காக அரசாங்கத்திற்கு மக்கள் கடந்த பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டுபெரும்பான்மையினை வழங்கி புதியதோர் அரசியல் யாப்பினை தயாரிப்பதற்கான அனுமதியினை வழங்கியுள்ளார்கள். நாம் உறுதியாக புதியதோர் அரசியல் யாப்பினை தயாரித்து விரைவில் வழங்குவோம். இதன் போது 35 வயதிற்கு மேற்பட்டோர் ஜனாதிபதி அபேட்சகராக தேர்தலில் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பத்தினை இவ்யாப்பின் ஊடாக ஏற்படுத்துவோம். இது ஒருவரை இலக்குவைத்து மேற் கொள்ளும் நடவடிக்கை அல்ல எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## அதிக வெப்பத்தினால்... 03ஆம் பக்க தொடர்...

ஏதேனும் சிக்கல் ஏற்படுமாயின் சிறிய எழுத்துக்களை பார்ப்பதில் பாதிப்பு ஏற்படும் என அவர் கூறியுள்ளார். எவ்வாறாயினும் இதுவரை கண் நோயாளர்களின் பதிவில் அதிகரிப்பு ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கோவிட் 19 கட்டுப்பாடுகளுடன் சுகாதார வழிமுறைகள் பின்பற்றப்படுவதால் கண் நோய் பரவுதல் குறைவடைந்துள்ளதாகவும் விசேட கண் நோய் நிபுணர் தெரிவித்துள்ளார். கடந்த சில நாட்களாக அதிக வெப்ப நிலை காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

## கிராமிய பொருளாதாரத்தை... 03ஆம் பக்க தொடர்...

இதனை மாற்றி அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் அன்றாட வாழ்விற்கு உதவும் என சிறிய பாலங்களை நிர்மாணிக்க திட்டமிட்டுள்ளதாகுவும் அமைச்சர் கூறினார். கிராமிய சூழல் உள்ளூர் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை கவர்கிறது.ஆனால் போக்குவரத்து இடர்பாடுகள் காரணமாக அவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல பின்வாங்குகின்றனர். இந்த பாலம் அமைக்கும் திட்டத்தினூடாக சுற்றுலா துறையும் மேம்படும். பாலம் அமைக்கும் திட்டம் முன்னெடுக்க வேண்டிய பிரதேசங்கள் அடையாளங் காணப்பட்டு வருவதோடு விரைவில் திட்டம் செயற்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.(பா)

## ஜனாதிபதி ஆணைக்குழுவில்...

குற்றச்சாட்டுகள் மற்றும் நீதித்துறை மற்றும் பொலிஸ் மீது தலையீடு குறித்து விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வாகனங்களின் விலையில்...

குறிப்பிட்டுள்ள அவர், பொதுமக்கள் வாகனங்களைக் கொள்வனவு செய்யும் போது அதிகளவு பணத்தை செலவிடுவது அநாவசியமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதனை நிவர்த்தி செய்யும் நோக்கில் போதியளவு வாகனங்களின் இறக்குமதி இடம்பெறும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## வீதி விபத்தில் வயோதிப... 03ஆம் பக்க தொடர்...

முந்திச் செல்ல முற்பட்ட போது வீதியில் பயணித்துக்கொண்டிருந்த குறித்த வயோதிப பெண் மீது லொறி மோதியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் படுகாயமடைந்த குறித்த வயோதிப பெண்ணை அங்கிருந்தவர்கள் உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதித்துள்ள போதிலும், அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

## மணவை தம்பியின்... 03ஆம் பக்க தொடர்...

இலங்கை தமிழ் தலைவர்கள் தமிழகம்வரும் போது தமிழகத் தலைவர்களின் அறிமுகம்செய்து வைத்து உறவுகளை பேனுவார். இறுதியில் 1. 9.2007 ஆம் ஆண்டு சென்னையில் இயற்கை எய்தினார். அவர் மறைந்து இன்றுடன் 13 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

## ஐ.தே.கவின் நிலை...

அவர் அழைப்பு விடுத்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும் போது இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

பொதுத் தேர்தல் முடிவுகளுக்கமைய மக்கள் எமக்கு ஒரு ஆணையை வழங்கியுள்ளனர். அதன் படி செயற்படுவதற்கே ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தீர்மானித்துள்ளார். அதனையே நாங்களும் விரும்புகின்றோம். எதிர்வரும் தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சக்தியினூடாகவே நாங்கள் போட்டியிடுவோம். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ பொறுப்பை யாருக்கு பெற்றுக் கொடுப்பது என்பது தொடர்பில் கட்சிக்குள் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்று வருவதாக கூறப்படுகின்றது.

## இந்திய முன்னாள் ஜனாதிபதி...

அடைந்தார். அவருக்கு கொரோனா பாதிப்பும், நுரையீரல் தொற்றும், சிறுநீரக கோளாறும் கண்டறியப்பட்டன. நுரையீரல் தொற்றை சரி செய்ய தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

நேற்றுக் காலை இராணுவ வைத்திய சாலை சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், 'பிரணாப் முகர்ஜியின் உடல் நிலையில் ஞாயிறு முதல் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. நுரையீரல் தொற்று காரணமாக உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் செப்டிக் அதிர்ச்சியில் உள்ளார். இந்த ஆபத்தான நிலையில் இருந்து அவர் மீண்டு வருவதற்காக, மருத்துவ நிபுணர்கள் குழு தொடர்ந்து கண்காணித்து வருகிறது. அவர் தொடர்ந்து ஆழ்ந்த கோமாவில், வென்டிலேட்டர் ஆதரவில் இருக்கிறார்' என கூறப்பட்டிருந்தது.

## மாடி வீடு எனும் போலியான...

இதில் வைத்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். மேலும் கூறுகையில்,

ஒவ்வொரு வருடமும் இந்த நாளில் ஐயாவின் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துவதற்கு இவ்விடத்துக்கு வருவோம். அன்று எனது தந்தை எம்மை அழைத்து வந்தார்.

இன்று அவர் இல்லை. அது பெரும் துயரை தருகின்றது. இருந்தாலும் நல்லுள்ளங்களை தேடிவைத்து விட்டே எனது தந்தை சென்றுள்ளார். அவர்கள் இன்று என்னை அரவணைக்கின்றனர்.

எனினும், மாடி வீடு, மாடி வீடு என அது தொடர்பில் தவறான கருத்துபரப்பட்டு வருகின்றது. கூரைக்கு பதிலாக 'கொங்ரீட்' போட்ட தனி வீடுகளையே நாம் அமைக்கவுள்ளோம். எனவே, போலித்தகவல்களை நம்பவேண்டாம். விரைவில் உண்மை என்னவென்பதை உங்களால் நேரில் காண முடியும்.

சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மண்டபத்தின் கீழ் நான்கு நிறுவனங்கள் வருகின்றன. அவை தொடர்பிலும் கலந்துரையாடினோம். மேற்படி நிறுவனங்களில் வளப்பற்றாக்குறை இருந்தது. அவை குறித்து சுட்டிக்காட்டினோம் என குறிப்பிட்டுள்ளார்.

## ஜனாதிபதி கோட்டாவிற்கு...

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது எஸ்பர், கொவிட் 19 தொற்றுநோயை வெற்றிகரமாக கையாண்டமை மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களின் சமீபத்திய முடிவுக்கு ஜனாதிபதிக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் குறித்த தொடர்ச்சியான முன்னேற்றத்தையும் இதன்போது அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் பொதுவான இருதரப்பு பாதுகாப்பு முன்னுரிமைகளை மதிப்பாய்வு செய்து, இராணுவ தொழில்மயமாக்கல், பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும் இந்த உரையாடலில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் அனைத்து நாடுகளின் இறையாண்மையை உறுதிப்படுத்தும் ஒரு சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ பசிபிக் மீதான அவர்களின் பகிரப்பட்ட அர்ப்பணிப்பு குறித்தும் இரு தலைவர்களும் விவாதித்துள்ளனர்.

## முன்னாள் பிரதமர் ரணிலிடம்...

பெற்றுக் கொடுப்பதற்காக ஆஜராகுமாறு இவருக்கு பல தடவை அறிவிக்கப்பட்டிருந்தது.இருந்தும் அவர் ஆஜராகாமல் காலம் கடத்தி வந்ததோடு நேற்று காலை ஆணைக்குழு முன் ஆஜரானார். நேற்று முன்னாள் அமைச்சர் அகில விராஜ் காரியவசமும் ஆஜராகியிருந்தார்.

கடந்த நாட்களில் முன்னாள் அமைச்சர்கள் , முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் ஆஜராகியிருந்தனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவு கடந்த மாதம் 21ஆம் திகதி ஆஜராகுமாறு முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு அழைப்பு விடுத்திருந்தது.

குறித்த தினத்தில் தனக்கு முன்னிலையாக முடியாது என ரணில் விக்ரமசிங்க ஆணைக்குழுவுக்கு அறிவித்திருந்தார். ஒகஸ்ட் 31ஆம் திகதி ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகவுள்ளதாக அவர் அறிவித்திருந்தார். அதற்கமைய அவர் நேற்று ஜனாதிபதி ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவில் ஆஜராகினார்.

இதேநேரம், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கடந்த 26ஆம் திகதி சுமார் 9 மணிநேரம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டிருந்தது.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி ஈஸ்டர் தினத்தன்று இலங்கையின் பல இடங்களில் நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதல்களில் 250இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததோடு, 500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தது தெரிந்ததே.

விசாரணையின்போது, இந்த தாக்குதல் குறித்து ஏற்கனவே புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல்கள் வழங்கப்பட்டதாகவும் இந்த விடயம் தொடர்பாக ரணில் மைத்திரி அரசாங்கம் உரிய நடவடிக்கையினை முன்னெடுக்கவில்லையென பலர் குற்றம் சாட்டியிருந்தனர்.

## கலைஞர் விருதுகள் அடுத்த வருடம் முதல்...

கலைக்க ளஞ்சியம் மற்றும் அகராதியை பராமரிக்க தேவையான வசதிகளுடன் கூடிய நிரந்தர அலுவலக கட்டிடம் உடனடியாக வழங்கப்படும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

எதிர்காலத்தில் கலாசார அலுவல்கள் அமைச்சினால் செயல்படுத்தப்படவுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் ஆய்வு செய்யும் போது பிரதமர் இது குறித்து அவதானம் செலுத்தி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கலைக்களஞ்சியத்தையும், அகராதியையும் பராமரிக்க அலுவலக வசதிகளுடன் கூடிய கட்டிடம் இல்லை என்று அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன முன்வைத்த திட்டங்களை பரிசீலித்த பின்னர், பிரதமர் உடனடியாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீரவை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அதற்கு நடவடிக்கை எடுத்தார்.

கூட்டத்தின் போது பிரதமர், ஜோன் டி சில்வா நினைவு அரங்கம் மற்றும் கலைக்கூடம் புனரமைப்பு பணிகள் தொடர்பில் ஆராய்ந்த பிரதமர், ரூ.1600 மில்லியன் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ள ஜோன் டி சில்வா நினைவு அரங்கின் இரண்டாம் கட்ட புனரமைப்பு பணிகளுக்கு இலங்கை கடற்படை அல்லது இராணுவத்தை ஈடுபடுத்துமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இதன்போது, கலாசார அலுவல்கள் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்படும் 2020 தேசிய கலை இலக்கிய விழா குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

எதிர்வரும் நவம்பர் மாதம் சிலாபம் ஆனந்த மத்திய கல்லூரியை மையமாகக் கொண்டு தேசிய கலை விழா நடைபெறுவதுடன், 'தேச நேத்ரு விருதுகள் மற்றும் மாவட்ட கலைஞர் விருதுகள்' குறித்து அமைச்சின் அதிகாரிகளால் பிரதமருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இம்முறை ஒரு மாவட்டத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ள கலைஞர் விருதுகள் அடுத்த முறை முதல் நாடு முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட வேண்டும் என்று பிரதமர் அறிவுறுத்தினார்.

நாடு முழுவதும் புதிதாக கட்டப்படும் 19 கலாசார மையங்கள் அடுத்த மூன்று மாதங்களுக்குள் திறக்கப்பட வேண்டும் என்றும், தேவையான பணியாளர்களை பொது நிர்வாக அமைச்சுடன் கலந்தாலோசித்து பெற்றுக் கொள்ளுமாறும் பிரதமர் கூறினார்.

ரன்மிஹிதென்ன டெலி சினிமா கிராமம் கடந்த நான்கரை ஆண்டுகளாக எந்தவித பராமரிப்பும் இல்லாமல் செயற்படுத்தப்பட்டு வந்ததாக குறித்த சந்தரப்பத்தில் கலந்து கொண்டிருந்த ரன்மிஹிதென்ன டெலி சினிமா கிராமத்தின் தலைவர் சிரேஷ்ட நடிகர் கலாநிதி ரவீந்திர ரண்தெனிய கூறினார்.

தேசிய மரபுரிமை அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன, இராஜாங்க அமைச்சின் செயலாளர் எஸ். டி.கொடிகார, கலாசார அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் விஜித நந்தகுமார உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

## வாழ்க்கைச் செலவை குறைக்க...

பொருட்களின் விலை உயர்வடைந்துள்ளதினால் நகர மத்திய தரப்பினரின் பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பாகவும் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

40% வீதமான கிராமிய விவசாயிகள் நிலையான மற்றும் போதியளவு வருமானத்தை பெற்றுக்கொள்ள வேண்டுமெனில் தமது விளைச்சலுக்கு உயர்ந்த விலை மற்றும் நிலையான சந்தை வாய்ப்பு உள்நாட்டில் இருக்கின்றது என்ற நம்பிக்கையை உறுதி செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாது கிராமிய மக்களை விவசாயத்திற்காக ஊக்கப்படுத்த முடியாது என குறிப்பிட்ட ஜனாதிபதி , இறக்குமதிக்கு விடுக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை நீக்குவதன் கஷ்டத்தையும் சுட்டிக்காட்டினார்.

அந்நியச் செலாவணி விகிதங்களை கட்டுப்படுத்துவதற்கும் உயர் கடன் சுமையிலிருந்து விடுபடுவதற்கும் இறக்குமதியை கட்டுப்படுத்த வேண்டுமென்று அவர் குறிப்பிட்டார். இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளும் கொவிட் நோய்த் தொற்றினால் இறக்குமதியை கட்டுப்படுத்தியுள்ளதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

குறைந்த வருமானமுடையவர்களின் பொருளாதாரத்தை பலப்படுத்துவதே வறுமையை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டு செயற்படுத்திய ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். சமூர்த்தி பயனாளிகளின் வளர்ச்சிக்கு அவர்கள் பங்களிக்க வேண்டும். வீட்டுத் தோட்டம். முட்டைக்காக கோழிகளை வழங்குவதன் மூலம் அவர்களின் போசாக்கு மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும்.

பொருட்களின் விலை அதிகரிக்கும் போது நகர, மத்திய தரப்பினர் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை வழங்குவதற்கு முறையான வேலைத்திட்டமொன்றின் அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டினார். கொவிட் நோய்த் தொற்று காலத்தில் விவசாய பொருட்களை மலிவு விலையில் நேரடியாக நுகர்வோருக்கு வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்தது. அந்த வழிமுறையை பின்பற்றி இடைத்தரகர்களின் சுரண்டலை தடுத்து, விவசாயியையும் நுகர்வோரையும் பாதுகாக்க முடியுமென்று ஜனாதிபதி குறிப்பிட்டார். கிராமிய மக்களின் பொருளாதாரத்தை பலப்படுத்துவதும் நகர மக்களை உயர் வாழ்க்கைச் செலவு சுமையிலிருந்து விடுவிப்பதும் ஒருசேர நடக்க வேண்டுமென்று அவர் சுட்டிக்காட்டினார்.

அதற்காக சதொச, கூட்டுறவுத்துறை, விவசாய சேவை மத்திய நிலையம் மற்றும் பாதுகாப்பு பிரிவினரின் உதவியுடன் விவசாய விளைச்சலை நேரடியாக நுகர்வோருக்கே விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுப்பது பற்றியும் அவதானம் செலுத்தப்பட்டது.

நாடு பூராவும் உள்ள பொருளாதார மத்திய நிலையங்களை சரியான பொறிமுறையின் கீழ் கொண்டு வந்து விவசாய விளைச்சல்களை கொள்வனவு செய்வதற்கான பொறிமுறை ஒன்றை உருவாக்குவது தொடர்பாகவும் வாழ்க்கை செலவு உபகுழு கலந்துரையாடியது.

வாரத்திற்கு ஒரு தடவை சந்தை நிலைமைகள் தொடர்பாக தனக்கு அறிவிக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

தேசிய மற்றும் மாவட்ட ரீதியாக ஒரு நபருக்கு தேவையான உணவின் அளவை இனங்காணல், பிரதேச செயலக தொகுதிவாரியாக வீட்டுத் தோட்ட முகாமைத்துவம் மற்றும் கோழி வளர்ப்பை அதிகரிப்பது தொடர்பாகவும் கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று பொருளாதார புத்தெழுச்சி தொடர்பான ஜனாதிபதி செலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டார். கௌப்பி, உழுந்து, நிலக்கடலை.எள்ளு, குரக்கன் மற்றும் வெங்காய பயிர்ச் செய்கை வெற்றி கண்டுள்ளதினால், எதிர்காலத்தில் அவற்றை இறக்குமதி செய்ய அவசியமில்லை என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ , அமைச்சர்களான பந்துல குணவர்தன, ரமேஷ் பத்திரன, மஹிந்தானந்த அழுத்கமகே மற்றும் இராஜாங்க அமைச்சர்களான அருந்திக்க பெர்ணான்டோ, ஷசீந்திர ராஜபக்ஷ, லசந்த அலகியவன்ன மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர, அமைச்சுக்களின் செயலாளர்களும் அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## ம.ம.முன்னணியின் சகல பொறுப்புகளில்...

தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் கட்சியின் செயலாளர் நாயகம் ஏ.லோரன்ஸ், நிதிச் செயலாளர் பேராசிரியர் விஜயசந்திரன், கட்சியின் உயர்மட்ட அங்கத்தவர்களும் தேசிய சபை பொதுச் சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். கட்சியின் உயர் பீடம் தேசிய சபை பொதுச் சபை ஆகியவற்றில் அங்கம் வகிக்கின்ற 245 அங்கத்தவர்களில் 204பேர் கலந்து கொண்டனர்.இவர்கள் அனைவரும் கீழ் கண்ட தீர்மானங்களுக்கு ஏகமனதாக தங்களுடைய சம்மதத்தை வழங்கினர். மேலும், அனுசா சந்திரசேகரன் கட்சியின் யாப்பிற்கு முரணாக செயற்பட்டதன் காரணமாக அவரை அனைத்து பதவிகளில் இருந்தும் வெளியேற்றுவது எனவும் எதிர்வரும் காலத்தில் அனுசா சந்திரசேகரன் மலையக மக்கள் முன்னணியின் கொடியையோ கட்சியின் நிறத்தையோ அல்லது அவர் ஏற்கனவே வகித்த பிரதி பொதுச் செயலாளர் நாயகம் என்ற பதவியையோ எந்த சந்தர்ப்பத்திலும் பாவிக்க முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டு. மாவட்ட ஊடகப் பிரிவிற்கு...

தொடர்பாக மாவட்ட தகவல் அதிகாரி வீ. ஜீவானந்தனிடம் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் கலந்துரையாடி தகவல்களைக் கேட்டறிந்து கொண்டார்.

மேலும் இப்பிரிவில் காணப்படும் ஆளணி மற்றும் பௌதீக தேவைகள் போன்றவற்றை விரைவாக நிவர்த்தி செய்து தருவதாக இராஜாங்க அமைச்சர் உறுதியளித்ததுடன் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் ஆலோசனைகளை வழங்கினார். மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி மற்றும் நிருவாக நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலாளர்களுடனான சந்திப்பினைத் தொடர்ந்து இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் மாவட்ட ஊடகப் பிரிவிற்கு விஜயம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

## மக்கள் சக்தி..

சந்திரசேகரனின் மகள் சட்டத்தரணி அனுசா சந்திரசேகரன் தெரிவித்துள்ளார். கட்சியிலிருந்து அனுசா சந்திரசேகரனை நீக்கும் வகையில் மலையக மக்கள் முன்னணியின் தேசிய சபை நேற்று எடுத்துள்ள தீர்மானம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

" மலையக மக்கள் முன்னணியின் தேசிய சபை எடுத்துள்ளதாகக் கூறப்படும் தீர்மானம் தொடர்பில் எனக்கு இன்னும் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படவில்லை. அவ்வாறு அறிவிக்கப்பட்டதும் எனது அடுத்தக்கட்ட நகர்வுகள் குறித்து தெளிவுபடுத்துவேன்.

யார், எப்படியான தீர்மானங்களை எடுத்தாலும் அரசியலில் அங்கீகாரம் வழங்கும் 'சுப்ரீம் பவர்' என்பது மக்களிடமே இருக்கின்றது. இதன்படி மலையக மக்கள் முன்னணியின் ஆதரவாளர்கள் எனது அரசியல் பயணத்தை அங்கீகரித்துள்ளனர்.இதன்காரணமாகவே எனக்கு 17 ஆயிரம் வாக்குகள் வழங்கப்பட்டன. மலையக இளைஞர், யுவதிகளும் புதிய அரசியல் தலைமைத்துவத்தை வரவேற்றுள்ளனர். எனவே, மக்களின் பேராதரவுடன் முன்நோக்கி பயணிப்பேன். தர்மத்துக்கும், அதர்மத்துக்குமிடையிலான போட்டியில் தர்மமே வெல்லும் என்பதையும் கூறிக்கொள்கின்றேன்." – என்றார் அனுசா சந்திரசேகரன்.

## காணாமல் ஆக்கப்பட்டோரது...

எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

குறித்த போராட்டத்தில் கலந்து கொண்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவகள் சர்வதேசமே மௌனம் காப்பது ஏன்?, இலங்கை அரசே உண்மையை மறைக்காதே ஒரு நாள் நிச்சையம் வெளி வரும்,காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எங்கே,சர்வதேசமே புதிய அரசாங்கத்திடம் நீதியை பெற்றுத்தாருங்கள் உள்ளிட்ட பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறும்,காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் புகைப்படங்களை ஏந்தியவாறும் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நினைவகம் ஒன்றை அமைப்பதற்கு இடம் கோரி கையெழுத்துக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டது.

மேலும் மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் அமைப்பினால் ஜனாதிபதிக்கு எழுதிய மகஜர் காலை 11.30 மணியளவில் போராட்டம் இடம் பெற்ற இடத்திற்கு வருகை தந்த மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபலன் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

சப்ரகமுவ மாகாணத்தில்

# 2000 மாணவர்களின் வீட்டு தோட்ட செய்கை

## மரக்கறி, பழச் செடிகள் இலவசம்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

சப்ரகமுவ மாகாணத்தில் 2000 மாணவர்கள் வீட்டு தோட்டங்களை ஆ ரம்பித்துள்ளனர். இவற்றுக்கான ம ரக்கறி மற்றும் பழச் செடிகள் மற்றும் அனுசரணைகளை இரத்தினபுரி மாவட்ட சாரணர் அமைப் பு மற்றும் சென் ஜோன்ஸ் எம்பியூலன்ஸ் சே வையினர் நடத்திவருகின்றனர். இவர்களுக்கான பயிர்கள் விதைகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின் றன. சப்ரகமுவ மாகாணக் கல்விய மைச்சு மற்றும் சப்ரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம் ஆகியவற்றின் வழிகாட்டலில் இத்திட்டம் தற்போ துவெற்றிகரமாக செயற்படுத்தப்பட் டுவருகிறது.

இப்பணியில் தற் போதுசுமார் 2000 மாணவர்கள் தமது வீட்டுக் காணிக ளில் அனுசரணையாளர்களின் உத வியுடன் வீட்டுத் தோட்டங்களை ஆரம்பித்துள்ளதாகவும் இவை கண் காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ள தாகவும் எதிர்காலத்தில் இத்திட்டம் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளதா கவும் சப்ரகமுவ மாகாணக்க ல்வித் திணைக்களம் மற்றும் கல்வியமைச் சின் தகவல் குறிப்புக்களில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# கணபதி அறநெறி பாடசாலையின் இறுவட்டு வெளியீட்டு விழா



**களுத்துறை சுழற்சி நிருபர்**

இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள அகல வத்தை டார்டன்பீல்ட் தோட்ட கணபதி அறநெறி பாடசாலையின் "பாடசாலைக் கீத இறுவட்டு வெளி யீட்டு விழா அதன் பொறுப்பாளர் சதாசிவம் உதயசாந்தனின் தலை மையில் நேற்று முன்தினம் (30) காலை 9 மணியளவில் தோட்ட முத் துமாரியம்மன் ஆலயத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது.



இதன்போது களுத்துறை மாவட் டத்தில் இயங்கும் பல்வேறு அறநெறி பாடசாலைகளையும் சேர்ந்த மாணவமாணவிகளினதும் இந்துப் பாரம்பரியங்களை பறை சாற்றும் வகையிலான கலைக் கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற் றன. களுத்துறை மாவட்டத்தில் பத்து வருடங்களுக்கு மேலாக அறநெறி பாடசாலைகளில் பணி யாற்றிவரும் ஆசிரிய,ஆசிரியர்கள் மற்றும் பிரதேச தமிழ் சமூகத்தின் வளர்ச்சிக்காக பல்வேறு வகைகளி லும் அயராது பணியாற்றி வரும் தன்னார்வலர்கள், நலன்விரும்பிகள் எழுத்தாளர்கள், விளையாட்டு வீரர் கள் மற்றும் ஊடகவியலாளர்களும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட னர்.

இவ் வைபவத்தின் பிரதம அதி தியாக கலந்து கொண்ட முன்னாள் நுவரெலியா மாவட்டத்தின் பாரா ளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் இங்கு அறநெறி பற்றிய விசேட சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தியதுடன் உதவியுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வாசிகசாலைக்கு அடையாளமாக ஒரு தொகுதி புத்தகங்களையும் வழங்கி வைத்தார். இதன்போது மேலும் பல பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# பத்தனையில் குளவி கொட்டியதால் இருவர் வைத்தியசாலையில்

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**



திம்புள்ள, பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொட்கலை யுலிபீல்ட் வெளிங்டன் பிரிவில் வேலைக்கு சென்ற தொழிலா ளர்கள் மீது குளவிகள் கொட்டி யதால் இருவர் வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனால் தோட்ட தொழில் துறை, சிறுவர் முன்பள்ளியின் கற்பித்தல் நடவடிக்கையும் நிறுத்தப் பட்டுள்ளது,

நேற்றுக் காலை வேலைக்கு சென்று கொண்டிருந்தவர்கள் உட்பட அவ்வழியின் வாகனங்களில் பயணித் தவர்கள் மீதும் குளவி கொட்டியுள் ளது . மரத்திலிருந்த குளவி கூடு திடீரென கலைந்து கொட்டிய மையால் பீதியடைந்த தோட்ட மக்கள் நேற்று தொழிலுக்கு செல்லாது தோட்டத்தின் சகல பகுதிகளிலும் தீ மூட்டி குளவி களை விரட்டும் நடவடிக்கை யில் ஈடுபட்டனர்

குளவி கொட்டுக்கு இலக்காகி கடும் காயங்களுக்கு உள்ளான ஆண் தொழிலாளர்கள் இருவர் கொட்டகலை ஆதார வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# கட்டுத் துவக்கு தவறுதலாக வெடித்து பசறையில் ஒருவர் பலி

**பசறை நிருபர்**

பசறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டெமேரியா தோட்ட, மாத்தென்ன பிரிவுக்கு அண்மையில் அமைந்துள்ள ரிட்டிக்காதோவ கிராமத்தில் உள்ள வீடொன்றில் சட்ட விரோதமாக தயாரிக் கப்பட்ட நாட்டுத் துப்பாக்கி (கட்டுத் துவக்கு) தவறுதலாக இயங்கி வெடிப்பு சம்பவம் ஏற்பட் டதில் சுனில் சாந்த (வயது 29) என்ற குடும்பஸ் தர் பலியானார். அவருடைய இரண்டரை வயது நிரம்பிய மகள் படுகாயமடைந்து பதுளை பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் கடந்த 29 ஆம் திகதி இரவு இடம்பெற் றுள்ளது.

இவ்வெடிப்பு சம்பவம் குறித்து மேலும் தெரி யவருவதாவது;

சம்பவ தினமிரவு வீட்டிற்கு வெளியே ஏதோ சத்தம் கேட்கவே குடிபோதையில் இருந்த குடும்பஸ்தர் தனது இரண்டரை வயது நிரம்பிய மகளை கையில் தூக்கிக்கொண்டு சமையலறை பகுதியில் இருந்த துப்பாக்கியை எடுத்து நிலத் தில் தட்டிக் கொண்டு வெளியில் செல்லும் போதே துப்பாக்கி இயங்கி குறித்த வெடிப்பு சம் பவம் நிகழ்ந்ததுள்ளது. படுகாயமடைந்த இருவ ரும் பசறை ஆதார வைத்தியசாலையில் அனும திக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை பொது வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டுள்ளனர். இதன் போதே குறித்த குடும்பஸ் தர் சிகிச்சை பலனின்றி இறந்துள்ளார். இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கார் வீதியை விட்டு விலகி விபத்து

**களுத்துறை சுழற்சி நிருபர்**



புலத்சிங்கள பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொபவக்க பகுதிகளில் நடுத்தர ஆடை தொழிற்சாலை ஒன்றுக்கு நூல் மற்றும் துணி வகைகளுடன் மாகம, தெல்பவத்தை நோக்கி வீதியில் பயணித்துக் கொண் டிருந்த கார் ஒன்று வீதியை விட்டு விலகி நேற்று முன்தினம் (30) விபத் துக்குள்ளானது. இதில் சாரதி படுகா யமடைந்துள்ளார். மேற்படி வயது முதிர்ந்த லொறிச் சாரதி நேற்று காலை முதல் முழு நாளும் கொழும்பு நகரில் லொறியை இயக்கிய நிலையில் ஏற்பட்ட தூக்க மயக்கதின் காரண மாகவே இவ் விபத்து ஏற்பட்டதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந் துள்ளது. புலத்சிங்கள பொலிஸார் விபத்து பற்றிய மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

# கிராம அபிவிருத்தி சங்க சிரமதானம்

முகாத்துவாரம் கிராம அபிவிருத்தி சங்கம் காக்கா தீவில் எதிர்வரும் 6 ஆம் திகதி அதிகாலை 6 மணிக்கு சிரம தான பணியொன்றை செய்யவுள்ளது.

இதில் அமைச்சர் தொலவத்தை, கொழும்பு பிரதேச செயலாளர் திருமதி காஞ்சனா, கொழும்பு மாந கரசபை உறுப்பினர்களான ராஜு பாஸ்கர், மகிந்த காந்தகம, நோபட் பெர்ணாண்டோ, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தனுஜா, யூ. சுரேந்திர, கலைஞர் எஸ். சரவணா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாக முகாத்து வாரம் கிராம அபிவிருத்திச் சங்க செய லாளர் ஜே. ஜோசப் ஜே. பி. தெரிவித் தார்.

கடற்கரைகளுக்கு அருகிலுள்ள கரையோரங்களையும் சுற்றாடல்களை யும் சுத்தப்படுத்தி பேணுவதன் மூலம் கடற்கரைகளை பாதுகாக்கலாம்.

இவ்வாறு கடற்கரைகளுக்கு அரு கில் வாழ்பவர்கள் சிரமதானம் மூலம் குப்பைகளையும் பொலித்தீன் பைக ளையும் அகற்றி சுத்தம் செய்து பாது காத்தால் எமது கடல் வளங்களை பேணி பாதுகாத்துக் கொள்ளலாம் என சங்கத்தின் செயலாளர் ஜே. ஜோசப் தெரிவித்தார். முகத்துவாரம் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்களுடன் இப்பகுதியிலுள்ள இளைஞர், யுவ திகளும் இணைந்து இந்த சிரமதான பணியை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்த பொதுப் பணிக்கு இப்பகுதி யில் வாழும் பொது மக்களும் பங்க ளிப்பு வழங்கினால் நன்றாக இருக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.


NLB

சேவன

திகதி 2020/08/30

சீட்டிழுப்பு இலக்கம் 291

G 33 34 43 57

| | பரிசுகள் | வெற்றியாளர் எண்ணிக்கை |
| --- | --- | --- |
| 1ம் பரிசு | ரூ 1,000,000/- | - |
| 2ம் பரிசு | ரூ 100,000/- | 03 |
| 3ம் பரிசு | ரூ 1,000/- | 87 |
| 4ம் பரிசு | ரூ 200/- | 137 |
| 5ம் பரிசு | ரூ 100/- | 3,420 |
| 6ம் பரிசு | ரூ 50/- | 1,935 |
| 7ம் பரிசு | ரூ 20/- | 48,817 |
| 8ம் பரிசு | ரூ 20/- | 7,568 |

ரூ. 14,000,000/-

ரூ. 1,980,850/-

NATIONAL LOTTERIES BOARD

www.nlb.lk

30.08.2020 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 614,830

பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 25,273,150.00

ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 1,000,000.00 பரிசுகள் 02 ரூ. 100,000.00 பரிசுகள் 24

கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 2525 சீட்டிழுப்பு திகதி 30.08.2020

P 18 26 48 54

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளர் எண்ணிக்கை |
| --- | --- | --- | --- |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியானவை | ரூ. 1,000,000.00 | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியானவை | ரூ. 100,000.00 | 05 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியானவை | ரூ. 2,000.00 | 167 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியானவை | ரூ. 1,000.00 | 369 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியானவை | ரூ. 100.00 | 8856 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியானவை | ரூ. 40.00 | 5776 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியானவை | ரூ. 20.00 | 143417 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியானவை | ரூ. 20.00 | 26060 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 184,651

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 6,709,180.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,784,169.60



NATIONAL LOTTERIES BOARD

சீட்டிழுப்பு இலக்கம் : 4230 உத்தியோகபூர்வ முடிவுகள்

மஹஜன சம்பத

திகதி: 30-08-2020

Q 5 2 5 1 6 0

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | பரிசு | வெற்றியாளர் எண்ணிக்கை |
| --- | --- | --- | --- |
| 1வது பரிசு | 5 2 5 1 6 0 | 2,000,000/- | 01 |
| 2வது பரிசு | 2 5 1 6 0 | 100,000/- | 09 |
| 3வது பரிசு | 5 1 6 0 | 10,000/- | 92 |
| 4வது பரிசு | 1 6 0 | 1,000/- | 926 |
| 5வது பரிசு | 6 0 | 100/- | 9,204 |
| 6வது பரிசு | 0 | 20/- | 90,898 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | பரிசு | வெற்றியாளர் எண்ணிக்கை |
| --- | --- | --- | --- |
| 7வது பரிசு | 5 2 5 1 6 | 10,000/- | 08 |
| 8வது பரிசு | 5 2 5 1 | 1,000/- | 92 |
| 9வது பரிசு | 5 2 5 | 100/- | 900 |
| 10வது பரிசு | 5 2 | 50/- | 9,152 |
| 11வது பரிசு | Q | 20/- | 36,384 |

ரூ. 8,931,640.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 29,804,844.00

தேசிய லொத்தர் சபை www.nlb.lk

தன நிதானய

உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி - 2020/08/30

சீட்டிழுப்பு இலக்கம் - 309

X 11 31 42 79

ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர் எண்ணிக்கை |
| --- | --- | --- | --- |
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியானவை | ரூ. 1,000,000.00 | 01 |
| 2 ஆம் பரிசு | [illegible] | ரூ. 100,000.00 | 04 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியானவை | ரூ. 3,000.00 | 54 |
| 4 ஆம் பரிசு | [illegible] | ரூ. 1,000.00 | 123 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியானவை | ரூ. 100.00 | 3,110 |
| 6 ஆம் பரிசு | [illegible] | ரூ. 60.00 | 2,079 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியானவை | ரூ. 20.00 | 54,131 |
| 8 ஆம் பரிசு | [illegible] | ரூ. 20.00 | 10,109 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 3,405,540.00

பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை 69,611

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை 115,611,533.04

NATIONAL LOTTERIES BOARD

Mega POWER

சீட்டிழுப்பு இலக்கம்: 597

உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 30/08/2020

R 10 13 18 19 67

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
| --- | --- | --- | --- |
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 03 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 127 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 291 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 7,104 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 4,742 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 117,463 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 21,215 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 231,770,165.15

ரூ. 12,873,800.00 ரூ. 11,996,611.20

ரூ. 4,245,940.00

தேசிய லொத்தர் சபை

# முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம் அஸ்வரின் 3 ஆம் ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிப்பு

*அஸ்ரப் ஏ சமத்*

*முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம் அஸ்வரின் 3 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று முன் தினம் பொரளையில் உள்ள அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் தலைமை*






*யகத்தில் அதன் தலைவர் லுக்மான் தலைமை யில் நடைபெற்றது.*

*இந் நிகழ்வில் அஸ்வரின் நெருங்கிய நண்ப ரான கொழும்பு முன்னாள் மேயர் ஓமர்காமில் அஸ்வர் பற்றிய நினைவு உரையை நிகழ்த்தி னார். அகில இலங்கை முஸ்லிம் லீக் முன்னாள் தலைவர் என்.எம். அமீன் , செயலாளர் அகமட் முனவ்வர் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.*

*அத்தோடு அஸ்வரின் நினைவாக உயர் தரத் தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்ட ன. அத்து டன் துஆப் பிராத்தனையும் இடம்பெற்றது.*

*நிகழ்வில் முன்னாள் அமைச்சர்களான ஏ.எச்.எம். பௌஸி, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் உட்பட அவரின் நண்பர்கள் அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் அங்கத்தவர் களும் கலந்து கொண்டனர்.*

*முன்னாள் மேயர் ஓமர் காமில் உரையாற்று கையில்,*

*ஏ.எச்.எம். அஸ்வர் 1974ல் இருந்து எனது நண்பன். நாங்கள் இருவரும் உலக கிரிக்கெட் போட்டி நிகழ்வினை பார்ப்பதற்காக லண்டன் சென்று கிரிக்கெட் ஆட்டத்தினை இரசித்து வருவோம். முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர் ஜெயவர்த்தன, ஆர். பிரேமதாஸ, டி.பி. விஜயதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ச, மர்ஹூம் பாக்கீர் மாக்கார் ஆகிய தலைவர்களுடன் மிகவும் நெருக்கமாக பழகியவர்.*

*தன்னால் முடியுமான உறவை சகல தலை வர்களுடன் ஏற்படுத்திக் கொண்டு அவர்களின் வீட்டுப் பிள்ளைகள் போன்று நெருங்கி பழகி சமூகம் சார்ந்த விடயங்கள் மதம், கலை, கலாசார விடயங்களில் பிரச்சினைகள் ஏழும் போதுதலைவர்களை அணுகி தீர்வைப்பெற்றுக் கொடுத்துள்ளார். தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்சவுடன் மிகவும் நெருக்கமாக பழகி வந்தார்.*

*பிரதமர் மஹிந்த ராஜபக்ச அஸ்வரைத் தேடி அடிக்கடி எனது வீட்டுக்கு வருவார். அதன் பின்னர் அஸ்வர், மஹிந்த ராஜப்கசவின் நம் பிக்கைக்குரியவராக செயல்பட்டார். அவர் ஒரு நடமாடும் புத்தகம்.சகலவற்றை அறிந்து அவர் கள் பற்றிய கட்டுரைகள் நினைவு முத்திரை வெளியிடல் நூல் எழுதுதல் ஞாபகார்த்த கட்டுரை எழுதல், இலக்கிய வாதிகளை கௌர வித்தல் போன்ற சகலவற்றிலும் அவரது பங்கு பெரிதும் பாரட்டக் கூடியது என்றார்.*


## பகிரங்க ஏலவிற்பனை

நிந்தவூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான இல. **EP NA-0840 மினி பஸ்** ஒன்று 2020.09.19ஆம் திகதி சனி காலை 10.00 மணிக்கு எமது சங்க தலைமைக் காரியாலய வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. **Made: Peugeot, Model: M.574 JWK, Colour: White** (வாகனத்தை பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.)

*மேலதிக தொடர்புகளுக்கு:*

**0672250038, 0779585042, 0765363558, 0779018837**



## விலைமனுக்களுக்கான அழைப்பு

## களனி பல்கலைக்கழகம், யக்கல

### கம்பஹா விக்ரமயாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தில் தற்போதுள்ள நான்கு மாடி கல்விசார் கட்டிடத்திற்கு (ஏசி2) கூரை கட்டமைப்புடனான கூரை நிர்மாணம்

1. பெசேவ நீங்கலாக 9.0 மில்லியன் (ஒன்பது மில்லியன்) ரூபா ஆகுசெலவில் மதிப்பீடு செய்யப்பட்டதும் கீழே விபரிக்கப்பட்டதும் கம்பஹா விக்ரமயாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தில் தற்போதுள்ள நான்கு மாடி கல்விசார் கட்டிடத்திற்கு கூரை கட்டமைப்புடனான கூரை நிர்மாணத்திற்காக யக்கல, களனி பல்கலைக்கழக கம்பஹா விக்ரமயாராச்சி ஆயுர்வேத நிறுவக பணிப்பாளரின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது கோருகின்றார்.

   இப்பணியானது சீமெந்து பூசுதல் மற்றும் மேசன் வேலைகள் தொடர்புள்ள மீதி கொன்கிறீட் வேலைகள் 280m² அண்ணளவான பிரதேசத்தில் கூரை நிர்மாண அமைப்புடன் யக்கல, களனி பல்கலைக்கழகம், கம்பஹா விக்ரமயாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தில் தற்போதுள்ள கட்டிடத்தையும் இணைத்து நான்கு மாடி கட்டிட கூரை கட்டமைப்பின் நிர்மாண குறைபாட்டு பொறுப்பேற்கும் காலப்பகுதியில் நிர்மாணம், பூர்த்தி செய்தல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றை அடக்குகின்றது.

   இந்த வேலைத்தளமானது யக்கல, களனி கம்பஹ பல்கலைக்கழக விக்ரமயாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தில் அமைந்துள்ளது.

   முழுவேலைகளின் பூர்த்தி செய்யும் காலமானது வேலை ஆரம்பமாகும் திகதியிலிருந்து 90 நாட்காட்டி நாட்களாகும்.

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் கட்டிட நிர்மாண வகுதியில் சி-6 அல்லது மேற்பட்ட தரத்தில் **CIDA** உடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.

4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு:

அ) கடந்த ஐந்து (5) வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளின் வருடாந்த சராசரி நிதிப்புரள்வு பெசேவ நீங்கலாக ஆகக் குறைந்தது 56 மில்லியன் ரூபாவாக (ஐம்பத்தாறு மில்லியன்) இருத்தல் வேண்டும்.

ஆ) ஆகக் குறைந்தது மூன்று (3) கட்டிடங்களின் நிர்மாணம் (உருக்கு கூரை கட்டமைப்பு மற்றும் கூரை மூடல்) நிகரான தன்மை, பெறுமதி மற்றும் சிக்கல்தன்மையில் உத்தேசிக்கப்பட்டுள்ள கூரை நிர்மாண வேலை (அண்ணளவாக 280 m² பிரதேசம்) மற்றும் ஆகக்குறைந்த பெறுமதியான 9.0 மில்லியன் ரூபாவில் 90 நாட்காட்டி நாட்களில் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் அல்லது கடந்த ஐந்து (5) வருடங்களில் விகிதாசார காலப்பகுதியில் உயர் பெறுமதியுடையதாகவிருத்தல் (இந்த தேவைப்படுத்தல்களுக்கு அமைந்தொழுகும் வகையில், சான்று பகரும் வேலைகளின் ஆகக் குறைந்தது 70% பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்)

இ) ஒப்பந்தரீதியிலான தேறிய கடப்பாடு திரவச் சொத்துக்கள் மற்றும்/ அல்லது கடன் வசதிகளின் ஆகக் குறைந்த கடன் வசதிகள் மற்றும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் பிரத்தியேகமாக மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு முற்பணக்கொடுப்பனவு 9 மில்லியன் ரூபாவிற்கு மாத்திரம் (ஒன்பது மில்லியன்) குறையாமலிருத்தல் வேண்டும்.

5. 2020 செப்டம்பர் 4 ஆம் திகதியிலிருந்து 2020 செப்டம்பர் 24 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 1.30 மணி வரையும் யக்கல, களனி பல்கலைக்கழக, கம்பஹா விக்ரமயாராச்சி ஆயுர்வேத நிறுவக பிரதி பதிவாளரின் அலுவலகத்தில் இலவசமாக விலைமனுக்கோரல் ஆவணங்கள் பரீட்சிக்கப்படலாம்.

6. 2020 செப்டம்பர் 4 ஆம் திகதியிலிருந்து 2020 செப்டம்பர் 24 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 1.30 மணி வரையும் பெசேவ அடங்கலாக 4,000 ரூபாவை மாத்திரம் (நாலாயிரம் ரூபா மாத்திரம்) மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், யக்கல, களனி பல்கலைக்கழக, கம்பஹ விக்ரமயாராச்சி ஆயுர்வேத நிறுவக பிரதி பதிவாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

7. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2020 செப்டம்பர் 24 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக மேலேயுள்ள முகவரியில் கிடைக்கும் வகையில் யக்கல, களனி பல்கலைக்கழக, கம்பஹா விக்ரமயாராச்சி ஆயுர்வேத நிறுவக பிரதி பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் பிரதி பதிவாளர், கம்பஹா விக்ரமயாராச்சி ஆயுர்வேத நிறுவகம், களனி பல்கலைக்கழகம், யக்கல என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் விலைமனு திறத்தலுக்கு சமுகமளிக்கலாம்.

8. விலைமனுவானது 2020 டிசம்பர் 24 ஆம் திகதி வரையும் (விலைமனுவை திறக்கும் நாளிலிருந்து 91 நாட்கள்) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

9. இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றிலிருந்து தொழில் வழங்குனருக்கு ஏற்புடையதாகும் வகையில் நியமமாக்கப்பட்ட படிவங்களின் 11 ஆம் பிரிவின் விலைமனு பிணை படிவத்தை பாவித்து (நிபந்தனையற்ற, மாற்ற இயலாத மற்றும் இலகுவில் ரொக்கப் பணமாக மாற்றக் கூடியது) 2021 சனவரி 21 ஆம் திகதி வரையும் (விலைமனுவை திறக்கும் நாளிலிருந்து 119 நாட்களுக்கு) செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் 94,000 ரூபா (தொன்னூற்றி நான்காயிரம் ரூபா) பெறுமதியானதுமான விலைமனுப்பிணையொன்றுடன் விலைமனுவானது இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

10. 2020 செப்டம்பர் 15 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு வேலைத்தளமான யக்கல, களனி பல்கலைக்கழக கம்பஹா விக்ரமயாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமும் தளவிஜயமும் நடைபெறும்.

11. மேலதிக விபரங்களுக்கு, தயவு செய்து யக்கல, களனி பல்கலைக்கழக, கம்பஹா விக்ரமயாராச்சி ஆயுர்வேத நிறுவக பிரதி பதிவாளருடன் தொடர்பு கொள்ளவும். (தொலைபேசி: 0332226618/**0332226027/0332222740/0332222748)**

**பணிப்பாளர்,**
**கம்பஹா விக்ரமயாராச்சி ஆயுர்வேத நிறுவகம்,**
**களனி பல்கலைக்கழகம்,**
**2020 செப்டம்பர் 1 ஆம் திகதி.**



WORLD BANK GROUP

கமத்தொழில் அமைச்சு

**காலநிலை சாமர்த்திய நீர்ப்பாசனமிடப்பட்ட கமத்தொழில் செயற்றிட்டம் (CSIAP)**

## பெறுகை அறிவித்தல்

கடன் இல : 6346LK

## கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வன்னேரிக்குளத்தின் நீர்ப்பாசன திட்டத்திலுள்ள விவசாய வீதி திருத்தம்

1. கமத்தொழில் அமைச்சின் காலநிலை சாமர்த்திய (Smart) நீர்ப்பாசனம் இடப்பட்ட கமத்தொழில் செயற்றிட்டத்தின் செலவினங்களுக்காக பல்வேறு நாணயங்களிலான 125 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு சமமான கடன் தொகை ஒன்று சர்வதேச அபிவிருத்தி அமைப்பிடம் இருந்து (IDA) இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அமைச்சிற்கு கிடைக்கப்பெற்றுள்ளதுடன் **கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வன்னேரிக்குளத்தின் நீர்ப்பாசன திட்டத்திலுள்ள விவசாய வீதி திருத்தத்திற்குரிய ஒப்பந்தத்தின்** கீழான தகுதியுள்ள கொடுப்பனவுகளுக்கு இக்கடன் உதவியின் ஒரு பகுதியை பிரயோகிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. **கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வன்னேரிக்குளத்தின் நீர்ப்பாசன திட்டத்திலுள்ள விவசாய வீதி திருத்தம்** தொடர்பாக தகுதி மற்றும் தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கமத்தொழில் அமைச்சு CSIAP செயற்றிட்டம் சார்பாக **வடக்கு மாகாண நீர்ப்பாசன திணைக்களப் பெறுகைக்குழுத் தலைவர்** தற்போது அழைக்கின்றார்.

**விபரங்கள் பின்வருமாறு:**

| ஒப்பந்த இலக்கம் | வேலைவிபரம் | பெ.சே.வ உள்ளிட்ட மதிப்பீடு செய்யப்பட்ட சிவில் ஆகுசெலவு (ரூ. மில்) | ஒப்பந்த காலம் | தேவைப்படும் தரம் | தேவைப்படும் விலைமனுப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | விலைமனு பிணைத் தொகை ரூபா | செல்லுபடிக் காலம் |
| LK-MOA-182547-CW-RFB | கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வன்னேரிக்குளத்தின் நீர்ப்பாசன திட்டத்திலுள்ள விவசாய வீதி திருத்தம் | 34.571 | 5 மாதம் | வீதி நிர்மாணிப்பு தொடர்பாக C5 அல்லது அதற்கு மேல் | 500,000 | 2021 தை 26 |

3. மேற்படி பொதிகளுக்காக **2020 புரட்டாதி 29ஆந்** திகதி வரையில் மேலே உள்ளவாறாக விலைமனுப் பிணையுடன் மேற்படி வேலைகளுக்கு விலைமனுக் கோரல்களை சமர்ப்பிப்பதற்கு விலைமனுதாரர்கள் அனுமதிக்கப்படுவார்கள். ஒரு விலைமனுதாரருக்கு பொதி ஒன்றிற்காக ஒரு விலைமனு கோரலை மாத்திரம் சமர்ப்பிப்பதற்கு அனுமதி அளிக்கப்படும். ஒப்பந்தம் கையளிக்கப்பட தகுதிபெறுவதற்கு வெற்றியாளரான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலிற்கு உட்படுத்தப்படுத்தப்படாது இருக்க வேண்டியதுடன் நிர்மாணிப்பு கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA) மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட தரத்திற்காக **வீதி நிர்மாணிப்புத்துறையில்** பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. உலகவங்கியால் அங்கீகரிக்கப்படும் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறைக் கூடாக விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.

5. ஆர்வம் காட்டும் தகுதியுள்ளவிலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை **வடக்கு மாகாண நீர்பாசன திணைக்கள பணிப்பாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடிவதுடன் (தொ.இல. 0212285445 தொ.ந.இல. 0212285440, மின் அஞ்சல் இல. irrigationnp@yahoo.com**) எந்த ஒரு வேலை நாளிலும் 9.00 - 14.00 மணி வரை அதே இடத்தில் விலைமனு ஆவணங்களை பரீட்சித்து பார்க்கலாம்.

6. **வடக்கு மாகாண நீரப்பாசன திணைக்கள பணிப்பாளருக்கு** ஒரு எழுத்துருவான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு ஒரு மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 7,500.00 செலுத்தப்படுவதன் மூலம் **2020 புரட்டாதி மாதம் 2ஆந்** திகதி முதல் **புரட்டாதி மாதம் 28ஆந்** திகதி வரை தகுதியுள்ள விலைமனுதாரர்களினால் ஆங்கில மொழியிலான ஒரு முழுமைப்படுத்தப்பட்ட விலைமனு ஆவணங்களின் தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப்பணமே ஆகும்.

7. விலைமனுக்கள் **2020 புரட்டாதி மாதம் 29ஆந் திகதி 14.30 மணிக்கு** அல்லது அதற்கு முன்னர் **திணைக்கள பெறுகைக்குழு தலைவர், நீர்ப்பாசன திணைக்களம், வடக்கு மாகாணம், கொலனி வீதி, ஏ9 வீதி, மாங்குளம்** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கோரல் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதம் ஆகும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விலைமனுத் திறப்பில் நேரடியாக கலந்துகொள்ளும் விலைமனுதாரர்கள் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் **2020 புரட்டாதி 29ஆந்** திகதி 14.30 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.


8. விலைமனுக்கள் **2020 மார்கழி 29ஆந்** திகதிவரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியாக 02 பிரதிகளில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல் பிரதிகள் வெவ்வேறான தபால் உறைகளில் சேர்க்கப்பட்டு முறையே மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிடப்பட்டு முத்திரை பொறிக்கப்பட்ட தபால் உறைகளில் சேர்க்கப்பட வேண்டும். அவ் இரண்டு தபால் உறைகளும் முத்திரை பொறிக்கப்பட்ட தனி தபால் உறை ஒன்றினுள் சேர்க்கப்பட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் **“கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வன்னேரிக்குளத்தின் நீர்ப்பாசன திட்டத்திலுள்ள விவசாய வீதி திருத்தம்”** எனக் குறிப்பிடப்படல் வேண்டும்,

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு**
**நீரப்பாசன திணைக்களம்,**
**வடக்கு மாகாணம்,**
**கொலனி வீதி,**
**A9 வீதி, மாங்குளம்.**
2020.09.01

# பேரருட்திரு அன்ரன் ரஞ்சித் ஆண்டகை புதிய ஆயராக திருப்பொழிவு





கொழும்பு அதி உயர் மறை மாவட்டத்திற்கு பரிசுத்த பாப்பரசரினால் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள துணை ஆயர் அன்ரன் ரஞ்சித் அடிகளாரின் ஆயர்த்துவ திருநிலைப்படுத்தல் திருப்பலி கடந்த 29ஆம் திகதி பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் இடம்பெறவுள்ளது. கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில் 29ஆம் திகதி காலை 9.00 மணிக்கு இந்த திருநிலைப்படுத்தல் சிறப்புத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

நாட்டில் அனைத்து மறை மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி மறை மாவட்டங்களின் ஆயர்கள் இந்த திருநிலைப்படுத்தல் சிறப்புத் திருப்பலியில் பங்கேற்றதுடன் நாட்டில் நிலவும் கொரோனா பாதிப்பு சூழ்நிலையில் மிகக் குறைந்தளவு அருட்பணியாளர்களே இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஸ)







கிறிஸ்தவ மஞ்சரி

லோரன்ஸ் செல்வா

# புனித மோனிக்காவின் கல்லறையில் திருத்தந்தை பிரான்சிஸ் இறைவேண்டல்

"ஆண்டவரில் நம்பிக்கை வைப்பதும் அவரது திட்டங்களில் நுழைவதற்கு முயற்சியை மேற்கொள்வதும் அவரது மீட்பு நாம் எதிர்பார்ப்பதைவிட மாறுபட்ட வழிகளில் நம்மை வந்தடையும் என்பதை ஏற்பதுமாகும்" என கடந்த வெள்ளியன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று சிறப்பிக்கப்பட்ட புனித அகஸ்டினின் திருநாளில் தனது பழைய வாழ்விலிருந்து புதிய புனித வாழ்வுக்குத் திரும்புவதற்கு அவரது அன்னை புனித மோனிக்காவின் ஆழ்ந்த இறைநம்பிக்கை எவ்வாறு அவருக்கு உதவியது என்பதை மையப்படுத்தி திருத்தந்தை அச் செய்தியை வெளியிட்டிருந்தார்.


புனித மோனிக்கா திருவிழா சிறப்பிக்கப்பட்ட ஆகஸ்ட் 27 வியாழன் மாலை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உரோம் நகரில் அமைந்துள்ள புனித அகஸ்டின் ஆலயம் சென்று புனித மோனிக்காவின் கல்லறையில் செபித்தார்.

திருத்தந்தை அவர்கள் புனித அகஸ்டின் ஆலயம் சென்று புனித மோனிக்கா கல்லறை முன்பாக இறைவேண்டல் செய்தது முதன்முறை அல்ல என்றும் இரு ஆண்டுகளுக்கு முன் அயர்லாந்து நாட்டிற்குத் திருத்துதுப் பயணத்தை முடித்து திரும்புகையில் திருத்தந்தை உரோம் புனித மேரி மேஜர் பெருங்கோவிலுக்குச் சென்று செபித்த பின் புனித அகஸ்டின் ஆலயத்திற்கும் சென்று புனித மோனிக்காவிடம் செபித்துள்ளார். அயர்லாந்து நாட்டில் நடைபெற்ற கத்தோலிக்க குடும்பங்களின் உலக மாநாட்டை நிறைவுசெய்து வத்திக்கான் திரும்புகையில் அன்னை மரியாவிடமும் புனித மோனிக்காவிடமும் திருத்தந்தை பிரான்சிஸ் மன்றாடினார். இத்தாலி நாட்டின் மிலான் நகரில் புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் புனித அகஸ்டின் புனித அம்புரோசிடம் திருமுழுக்குப் பெற்றபின் அவரும் அவரது அன்னை புனித மோனிக்காவும் ஆப்ரிக்கா செல்வதற்காக மேற்கொண்ட கப்பல் பயணத்தின போது இத்தாலியின் ஓஸ்தியாவில் புனித மோனிக்கா (கி.பி.322–387) இறைவனடி சேர்ந்துள்ளார்.

மேரி தெரேசா...



# சிலுவையின் மூலமான விடுதலை



இரண்டு பேர் கிணற்றில் குதித்தனர். அவர்களில் ஒருவர் தண்ணீல் மூழ்கி இறந்தார். ஏனெனில் அவர் தலைக்கனம் பிடித்தவர். மற்றவர் தண்ணீர் மேல்மிதந்தார். ஏனெனில் அவர் மரமண்டையர். கிறிஸ்துவின் சீடர்களில் ஒரு சிலர் தலைக்கணம் பிடித்தவர்களாக இருந்தனர். எனவேதான் அவர்கள் தங்களுக்குளே யார் பெரியவர் என்று வாக்குவாதம் செய்தனர் (மாற்கு 9:34). மேலும் அவர்கள்மரமண்டைகளாகத் திகழ்ந்தனர்.

ஏனெனில் கிறிஸ்து சிலுவை மரணம் பற்றிக் கூறியதைஅவர்களால் புரிந்து ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எனவேதான் கிறிஸ்துஎம்மாவுக்குச் சென்ற இரு சீடர்களிடம் "அறிவிலிகளே இறைவாக்கினர்கள் உரைத்தஎல்லாவற்றையும் நம்ப இயலாத மந்த உள்ளத்தினரே மெசியா தாம் மாட்சி அடைவதற்கு முன் இத் துன்பங்களைப் படவேண்டுமல்லவா?" என்றார் (லூக் 24:25).

கடந்த ஞாயிறு நற்செய்தியில் கிறிஸ்து தம் பாடுகளைப் பற்றி முதன் முறையாகஅறிவித்தார். ஆனால் பேதுருவால் அதைப் புரிந்து ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எனவே கிறிஸ்துவையே அவர் கடிந்து கொள்கிறார்.

மெசியாவும் சிலுவையும் இணைந்து செல்ல முடியும் என்று அவர் கேட்கிறார். கிறிஸ்துவை அவர், "மெசியா, வாழும் கடவுளின் மகன்" என்று அறிக்கையிட்டார். ஆனால் அவர் நினைத்த மெசியாமகிமையின் மெசியா, இஸ்ரயேல் மக்களை ஆளவிருக்கும் மெசியா, சிலுவையில்அறையப்படவேண்டிய மெசியா அல்ல. சிலுவை எப்பொழுதும் சீடர்களுக்கு இடறலாகஇருந்தது.

திருத்தூதர் பவுல் கூறுகிறார். "நாங்கள் அறிவிப்பது சிலுவையில்அறையப்பட்ட மெசியா.சிலுவையோ யூதருக்குத் தடைக்கல்லாகவும் பிற இனத்தாருக்குமடமையாகவும் உள்ளது. ஆனால் சிலுவையில் அறையுண்ட கிறிஸ்து கடவுளின் வல்லமைகடவுளுடைய ஞானம்" (1கொரி 1:2324)

சிலுவையின்றிக் கிறிஸ்து இல்லை சீடத்துவமும் இல்லை. கிறிஸ்துவின் சீடராகஇருக்க விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டுகிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும் (மத் 18:24). சிலுவையைச் சுமக்காத எவரும்கிறிஸ்துவின் சீடராக இருக்கமுடியாது, (லூக்கா 14:27).

திருமணத்தின்போது மணமகன் கழுத்தில் கட்டப்படும் மெல்லிய மஞ்சள் நிறத்தாலிக் கயிற்றை அகற்றிவிட்டுகெட்டியான தங்கத் தாலிச் சங்கிலிகட்டப்படுவதுபோல, பேதுருவின் முதல் உறுதியற்ற அழைத்தல் இரண்டாவதுஅழைத்தலால் உறுதியடைகின்றது.

மீன் பிடித்துக் கொண்டிருந்த பேதுருவை "என்பின்னே வா" (மத் 4:19) என்று கிறிஸ்து அழைத்தார். ஆனால் பேதுரு கிறிஸ்துவைமூன்று முறை மறுதலித்து தனது அழைத்தலை இழந்தார்.

கிறிஸ்து அவரை மன்னித்துஇரண்டாம் முறை, "என்னைப் பின்தொடர்" (யோவா 21:19) என்றார் பேதுருவுடையசீடத்துவம் அவருடைய சிலுவைச் சாவால் நிறைவு அடையும் என்பதையும் கிறிஸ்துஅவருக்குச் சுட்டிக்காட்டினார் (யோவா 21:18). கடவுளால் சிறப்பான அழைப்புப் பெற்றவர்கள் மற்றவர்களை விட அதிகம்துன்புறுகின்றனர். அன்றைய முதல் வாசகத்தில் பல்வேறு துன்பங்களுக்கு இலக்கானஇறைவாக்கினர் எரேமியா கடவுளிடம் பின்வருமாறு முறையிடுகிறார்: "ஆண்டவரேநீர் என்னை ஏமாற்றி விட்டீர் நானும் ஏமாந்து போனேன்" (எரே 267)

ஆயுள் முழுவதும் அருங்கொடையில் தன்னைக் கரைத்துக் கொண்ட ஒரு பெண்மணி புற்றுநோயால் இறந்து கொண்டிருந்தார். அவர் என்னிடம், "சாமி இயேசு என்னைக் கைவிட்டுவிட்டார்" என்று சொல்லி அழுதார். அவரிடம் நான் "அம்மா இயேசுவே சிலுவையில்என் இறைவா என் இறைவா! ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று கூறினார். ஆனால்இறுதியில், "தந்தையே என ஆவியை உமது கையில் ஒப்படைக்கிறேன்" என்று கூறினார்.அவ்வாறே நீங்களும் கடவுளிடம் சரணடையுங்கள்" என்றேன் அவரும் அமைதியாக மரணம்அடைந்தார்.

துன்பத்தைக் கடவுளின் சாபமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. ஏனெனில், "ஆண்டவர்தாம் யாரிடம் அன்பு கொண்டிருக்கிறாரோ அவர்களைக் கண்டிக்கிறார் " (எபி 12:6). கிறிஸ்து சிலுவையால் மாட்சிமை அடைந்தார் சிலுவையில் அவர்உயர்த்தப்பட்டார் சிலுவையிலிருந்து மாந்தர் அனைவரையும் தம் பால் ஈர்த்துக்கொண்டார் (யோவா 12:32). ஒவ்வொரு துன்பமும் நம்மைப் புடமிட்டுத்தூய்மைப்படுத்தி மாட்சிமை அடையச் செய்கிறது.

தன்னைச் சிலுவையிலிருந்து பிரிக்க நினைத்த பேதுருவைக் கிறிஸ்து "சாத்தானே" என்று அழைத்தார் அன்று கிறிஸ்துவை கோபுரத்திலிருந்து குதிக்கச்சொன்ன சாத்தான்அவரைக் கடைசியாகச் சிலுவையிலிருந்து இறங்கிவரச் சொன்னான். ஆனால் சிலுவையிலிருந்து கீழே இறங்கி வரவில்லை மாறாகச் சிலுவையில் தொங்கிநம்மை மீட்டார் கிறிஸ்து.

நம்மைச் சிலுவையிலிருந்து விடுவிக்கமாட்டார் ஆனால்சிலுவையின் மூலம் விடுவிப்பார் சிலுவை கடவுளுடைய ஞானம் கடவுளுடைய வல்லமை.

திருத்தூதர் பவுல் சிலுவையைப் பற்றி கொண்டிருந்த மனநிலை நம்மிடம்இருப்பதாக. "நானோ நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சிலுவையை அன்றி வேறு எதைப்பற்றியும் ஒருபோதும் பெருமை பாராட்டமாட்டேன். அதன் வழியாகவே, என்னைப்பொறுத்த வரையில், உலகம் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது. உலகைப்பொறுத்தமட்டில் நானும் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன்" (கலா 6:14)

அருட்பணி
வை. இருதயராஜ்...

தினகரன்
# விளையாட்டு
2020 செப்டெம்பர் 1 செவ்வாய்க்கிழமை
sports.tkn@lakehouse.lk



# பாகிஸ்தானுக்கு எதிரான 20க்கு 20 போட்டி:
## மோர்கன், மலான் அதிரடியுடன் இங்கிலாந்து வெற்றி

சுற்றுலா பாகிஸ்தான் மற்றும் இங்கிலாந்து அணிகள் இடையிலான ரி 20 தொடரின் இரண்டாவது போட்டியில், இங்கிலாந்து அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை (28) மன்செஸ்டர் நகரில் நடைபெற்ற பாகிஸ்தான் – இங்கிலாந்து அணிகள் இடையிலான ரி 20 தொடரின் முதல் போட்டி மழையினால் கைவிடப்பட இரண்டாவது போட்டி முதல் போட்டி இடம்பெற்ற அதே மன்செஸ்டர் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (30) ஆரம்பமாகியது.

தொடர்ந்து போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணித்தலைவர் ஒயின் மோர்கன் முதலில் துடுப்பாடும் சந்தர்ப்பத்தினை பாகிஸ்தான் அணிக்கு வழங்கினார்.

இதன்படி போட்டியில் முதலில் துடுப்பாடிய பாகிஸ்தான் அணிக்கு அதன் தலைவர் பாபர் அஸாம் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராக வந்து அரைச்சதம் ஒன்றினைப் பெற்றுக்கொடுத்தார். தொடர்ந்து முன்வரிசையில் துடுப்பாடிய மொஹமட் ஹபீஸ் அதிரடியான அரைச்சதம் ஒன்றினைப் பெற்றார். இதனால் 20 ஓவர்கள் நிறைவுக்கு பாகிஸ்தான் அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 195 ஓட்டங்களைக் குவித்துக் கொண்டது.

பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்டம் சார்பில் ரி 20 சர்வதேசப் போட்டிகளில் தன்னுடைய 15ஆவது அரைச்சதத்தினைப் பூர்த்தி செய்த பாபர் அஸாம் 44 பந்துகளுக்கு 7 பௌண்டரிகள் அடங்கலாக 56 ஓட்டங்களைப் பெற்றார். இதேநேரம், மொஹமட் ஹபீஸ் 4 சிக்ஸர்கள் மற்றும் 5 பௌண்டரிகள் அடங்கலாக வெறும் 36 பந்துகளுக்கு 69 ஓட்டங்களை எடுத்தார்.

மொஹமட் ஹபீஸ் இப்போட்டி மூலம் ரி 20 சர்வதேசப் போட்டிகளில் 2,000 ஓட்டங்கள் என்கிற மைல்கல்லினை எட்டியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சு சார்பில் மணிக்கட்டு சுழல்வீரரான ஆதில் ரஷீட் 2 விக்கெட்டுக்களைச் சாய்க்க கிறிஸ் ஜோர்டன் மற்றும் டோம் கர்ரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதம் சாய்த்திருந்தனர்.

பின்னர் போட்டியின் வெற்றி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்ட 196 ஓட்டங்களை அடைய பதிலுக்கு துடுப்பாடிய இங்கிலாந்து அணிக்கு அதன் தலைவர் ஒயின் மோர்கன், ஜொன்னி பெயர்ஸ்டோவ் மற்றும் டேவிட் மலான் ஆகியோர் தமது அசத்தலான துடுப்பாட்டம் மூலம் உதவினர்.

இந்த வீரர்களின் துடுப்பாட்ட உதவியோடு இங்கிலாந்து அணி போட்டியின் வெற்றி இலக்கினை 19.1 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 199 ஓட்டங்களுடன் அடைந்தது.

இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு உதவிய ஒயின் மோர்கன் அவரின் 14ஆவது ரி 20 அரைச்சதத்தோடு வெறும் 33 பந்துகளில் 4 சிக்ஸர்கள் மற்றும் 6 பௌண்டரிகள் அடங்கலாக 66 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இதேநேரம், இங்கிலாந்து அணிக்கு மற்றுமொரு அரைச்சதம் பெற்று உதவிய டேவிட் மலான் 36 பந்துகளுக்கு 54 ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தார். இதேவேளை, ஜொன்னி பெயர்ஸ்டோவ் 24 பந்துகளுக்கு 44 ஓட்டங்களை எடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

மறுமுனையில் பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சு சார்பில் சதாப் கான் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியும், ஹரிஸ் ரவூப் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றி சிறந்த பந்துவீச்சினை வெளிப்படுத்திய போதும் அவர்களின் பந்துவீச்சு வீணானது.

போட்டியின் ஆட்ட நாயகனாக இங்கிலாந்து அணியின் தலைவர் ஒயின் மோர்கன் தனது சிறந்த துடுப்பாட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டார்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி மூன்று போட்டிகள் கொண்ட ரி 20 தொடரில் 1–0 என முன்னிலை அடைந்திருக்க, ரி 20 தொடரின் மூன்றாவதும் இறுதியுமான போட்டி இரண்டாம் போட்டி நடைபெற்ற இதே மன்செஸ்டர் மைதானத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (01) நடைபெறவுள்ளது.

SINCE 1978 42nd
OBSERVER MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2020
Recognizing talent, inspiring greatness.
Sri Lanka Telecom Mobitel
உங்களுடனே. என்றும்.

## 42வது ஒப்சவர்–மொபிடெல்
### மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை- 2020

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் ஒப்சேவர் - மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2020**

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2020**

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..........
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..........
**(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)**
பாடசாலை : ..........
வாக்களித்தவர் பெயர் : ..........
முகவரி : ..........
மொபைல் இல. : ..........
SUNDAY OBSERVER

**Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்**

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

1வது பரிசு : Mobitel 4G Wi-Fi Router
2வது பரிசு: ரூ. 2,500
3வது பரிசு: ரூ.1,500
4வது பரிசு: ரூ. 1,000


42வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**நிபந்தனைகள்:**


மொபிடெல் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்குபெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 2020-09-05 இல. 26




## கேகாலை மாவட்ட உடல் கட்டழகர் போட்டி அமீன் முதலாமிடம்



கேகாலை மாவட்ட உடல் கட்டழகர் போட்டியில் அரனாயக்க தல்கஸ்பிட்டியைச் சேர்ந்த எம்.எஸ்.எம். அமீன் முதலாமிடம் பெற்று, மிஸ்டர் கேகாலையாக தெரிவாகியுள்ளார்.

80 கிலோ கிராம் எடை பிரிவின் கீழ் ஏழு நட்சத்திர சவால் கேடயத்திற்காக இடம் பெற்ற போட்டியிலேயே இவர் முதலிடம் பெற்றுள்ளார்.

அண்மையில் கேகாலை நகர மண்டபத்தில் நடைபெற்ற இந்தப் போட்டிகளை எம்பெயார் ஜிம் நிறுவனமும் கேகாலை மாவட்ட உடல் கட்டழகர் மற்றும் தேகாரோக்கிய அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

தல்கஸ்பிட்டியைச் சேர்ந்த எம்.எஸ்.எம். அமீன், தேகாரோக்கியம் மற்றும் உடற் பயிற்சித் துறையில் என்வீகியூ 4 தகுதிச் சான்றிதழ் பெற்றவராவார். அடுத்து இடம்பெறவுள்ள சப்ரகமுவ மாகாண போட்டிகளில் பங்குபற்றுவதற்கான தயார்படுத்தல்களில் இவர் தற்போது ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நியு ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் சீருடை அறிமுகம்



**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருப**

அட்டாளைச்சேனை நியு ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் 2020ம் ஆண்டுக்கான புதிய சீருடை அறிமுக நிகழ்வு கழகத் தலைவர் எஸ்.ஏ.றஹீம் தலைமையில் அட்டாளைச்சேனை உணவு கலையகத்தில் நடைபெற்றது.

நியு ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் சிரேஷ்ட வீரர்களான எஸ். ஆப்தீன், கே.சாஜித் ஆகியோர்களது நிதியின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட புதிய சீருடைகள் இதன்போது வருகை தந்த ஆலோசகர்கள் மற்றும் நிருவாக உறுப்பினர்களால் வீரர்களுக்கு வழங்கி அறிமுகம் செய்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கழகத்தின் ஆலோசகர்கள், கழகத்தின் செயலாளர்,பொருளாளர், முகாமையாளர் உட்பட கழகத்தின் நிருவாக உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## கொரோனாவுக்கு மத்தியில் அமெரிக்க பகிரங்க டென்னிஸ் போட்டி ஆரம்பம்



கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் அமெரிக்க பகிரங்க டென்னிஸ் போட்டி நியூயோர்க்கில் நேற்று ஆரம்பமானது.

'கிராண்ட்ஸ்லாம்' என்ற உயரிய அந்தஸ்துபெற்ற அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடர் நேற்று (திங்கட்கிழமை) ஆரம்பமாகி எதிர்வரும் 13ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

கொரோனா வைரஸ் பரவலால் விம்பிள்டன் உட்பட பல தொடர்கள் இரத்தான நிலையில் நடக்கும் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டி இதுவாகும்.

கொரோனா தடுப்பு பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி நடக்கும் இந்தப் போட்டியில் இரசிகர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதுடன் வீரர்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்த போட்டிக்கான மொத்த பரிசுத் தொகை 53.4 மில்லியன் டொலர் என்பதுடன் இதில் ஒற்றையர் பிரிவில் பட்டம் வெல்லும் வீரர், வீராங்கனைகளுக்கு தலா 3 மில்லியன் டொலரும் இரட்டையர் பிரிவில் தலா 4 இலட்சம் டொலரும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய சீருடை அறிமுகமும் சினேகபூர்வ கிரிக்கெட் சுற்றுப்போட்டியும்



**சவளக்கடை குறூப் நிருபர்**

சவளக்கடை 6ஆம் கொளனி மைட்டி வோரியஸ் விளையாட்டுக் கழகத்தின் புதிய சீருடை அறிமுக சினேகபூர்வ கிரிக்கெட் சுற்றுப்போட்டி 6ஆம் கொளனி அல்தாஜூன் பாடசாலை மைதானத்தில் நேற்றுமுன்தினம் 29 ம் திகதி இடம்பெற்றது.

20 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அணிக்கு 11பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி சாய்ந்தமருது ஒஸ்மான் விளையாட்டுக் கழகத்திற்கும், 6ஆம் கொளனி மைட்டி வோரியஸ் விளையாட்டுக் கழகத்திற்குமிடையிலான சினேகபூர்வ சீருடை அறிமுக கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் 6ஆம் கொளனி மைட்டி வோரியஸ் விளையாட்டுக்கழகம் சம்பியன் கிண்ணத்தை சுவிகரித்துக்கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சாய்ந்தமருது ஒஸ்மான் விளையாட்டுக் கழகம் 6ஆம் கொளனி மைட்டி வோரியஸ் விளையாட்டுக் கழகத்தினை முதலில் துடுப்பெடுத்தாட பணித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய 6ஆம் கொளனி மைட்டி வோரியஸ் விளையாட்டுக் கழகம் 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கட்டுகளை இழந்து 258 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது ஒஸ்மான் விளையாட்டுக் கழகம் 16.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கட்களையும் இழந்து 154 ஓட்டங்களை பெற்று தோல்வியைத் தழுவிக்கொண்டது.

இந்நிகழ்வு மைட்டி வோரியஸ் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் எம்.எச்.எம். கபீர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு சவளக்கடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி றம்சீன் பக்கீர், சாய்ந்தமருது சிங்கர் சோ றூம் உரிமையாளர் எஸ்.எச்.ஜிப்ரி, 6ஆம் கொளனி சனா றைஸ் மில் உரிமையாளர் யூ.எல்.பாறூக், மைட்டி வோரியஸ் விளையாட்டுக் கழகத்தின் பயிற்றுவிப்பளர் ஏ.எம். ஜனீஸ், றோயல் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஏ.எம்.வசீர் உள்ளிட்ட முக்கிஸ்தர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 செப்டெம்பர் மாதம் 1ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.